கல்வெட்டு

Kalvettu


திருவள்ளுவர் ஆண்டு 2040 சித்திரைத் திங்கள்




26-06-2009 அன்று தொல்லியல் துறையின் நூல்கள் வெளியீடு நிகழ்ச்சியில் முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்**, இஆப, முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திருமிகு **தங்கம் தென்னரசு** அவர்கள் வெளியிட சுற்றுலா(ம)பண்பாட்டுத் துறை செயலர் முனைவர் **வெ. இறையன்பு** இஆப, அவர்கள் பெற்றுக் கொள்கிறார்

கல்வெட்டு - காலாண்டிதழ் 77 (ஏப்ரல் 2009) விலை: ரூ. 10.00
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை


பாவாலியில் சில வரலாற்றுச்சுவடுகள்



மாதாந்திர சொற்பொழிவு



பார்மேனால் வெளியிடப்பட்ட செப்பேடு



சதிக்கல்

முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,** இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008
20-08-09

பதிப்புரை

சிறந்த ஆய்வுக் கட்டுரைகளுடன் 'கல்வெட்டு' காலாண்டிதழ் 77 வெளியிடப்படுகிறது. இவ்விதழில் 'சிற்பங்கள் உயிர் வாழ...' என்ற தலைப்பில் சீரிய கருத்துக்களை உள்ளடக்கிய தமிழக அரசு சுற்றுலாத் துறைச் செயலர் முனைவர் **வெ. இறையன்பு,** இஆப, அவர்களின் கட்டுரையாகும். 'இந்தச் சிற்பங்களை பார்க்க செல்கிறவர்கள் சிலர், சிற்பிகள்கூட தங்கள் பெயரை பதிக்காத சிற்பங்களில், தங்கள் பெயரை பதிக்க விரும்புகின்றனர். படையெடுப்பின் போது, உயிர் போனால் பரவாயில்லை. சிற்பங்களை காப்பாற்ற வேண்டுமென்று, புதைத்து, மறைத்து காப்பாற்றிக் கொடுத்தவற்றை கல் நெஞ்சக்காரர்கள் சிதைக்கின்றனர்' என்ற வரிகள் இவரது ஆழ்ந்த அழுத்தமான சிந்தனைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

ஆதிச்ச நல்லூரும் அழகன்குளமும் ஓர் ஒப்பீடு என்ற கட்டுரையில் இத்துறை முன்னாள் இயக்குநர் திரு. நடன.காசிநாதன், இவ்விரு இடங்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை வெளிப்படுத்தியுள்ளார். பேயாழ்வார் பெயர்க் காரணம் பற்றி பேராசிரியர் தி. கோவிந்தன் அவர்களின் கட்டுரை புதிய செய்தியைத் தெரிவிக்கிறது. முசிறிப் பானை ஓட்டில் இருப்பது வில்லா? சொல்லா? என்ற பேராசிரியர் இரா.மதிவாணன் அவர்களின் கட்டுரை தொல்லியல் ஆய்விற்கு ஒரு திறவுகோல்.

பாவாலியில் ஓர் வரலாற்றுச் சுவடுகள், ஆனந்தூரில் சித்திமேழி விடங்கர் கல்வெட்டு, கண்டராதித்த சோழன் கண்மாய் மதராஸ் பெயர்க் காரணம் ஆகிய கட்டுரைகள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

இவ்விதழ் வெளியிடும் பணியினை மேற்கொண்ட அகழாய்வாளர் முனைவர் சீ.வசந்தி, இவ்விதழுக்கு அட்டைபடம் வடிவமைத்து டிடிபி செய்த திருமதி. தே.சத்தியவதி மற்றும் அச்சுப்பணி மேற்கொண்ட அச்சுப்பிரிவினருக்கும் என் வாழ்த்துக்கள்.

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

உள்ளே.......

வ.எண். **பக்கம்**

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,** இ.ஆ.ப, அவர்கள் சார்பாக முனைவர் **சீ. வசந்தி,** அகழாய்வாளர் அவர்களால் வெளியிடப்பெற்றது.

இணையதளம் www.tnarch.gov.in

மின் அஞ்சல் tnarch@tn.nic.in

❶

சிற்பங்கள் உயிர் வாழ ...

முனைவர் **வெ. இறையன்பு** இஆப,
செயலர், தமிழக அரசு சுற்றுலாத் துறை

தமிழகத்தில் கலைகளைப் பாதுகாக்கும் வடிவங்களாக, ஆலயம், கோபுரம், சிற்பம், கல்வெட்டுகள் உள்ளன. கோவில் என்பது கோபுரம் மட்டுமல்ல. அது, கலையின் வெளிப்பாடு, அர்ப்பணிப்பின் அடையாளம், சிற்பங்களின் கூடம். ஓவியங்களின் சாம்ராஜ்யம். அமைதியின் இருப்பிடம், வழிப்பாட்டின் பிறப்பிடம்.

தமிழக கோவில்களில் உள்ள முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கலை வடிவங்கள், பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு கோவிலையும், உன்னிப்பாக வலம் வந்து, அங்கு இருக்கும் கட்டடக் கலை நுட்பத்தையும், சிற்பங்களின் நுணுக்கத்தையும் நுகர்ந்தால், மெய்ஞானம் கிடைத்த அனுபவம் கிடைக்கும்.

சிற்பங்களை வரலாற்றுச் சம்பவத்தையும், இதிகாசச் சுருக்கத்தையும் மையமாக வைத்து, சிற்பிகள் வடித்தனர். கல்லில், ஓவியத்தைக் காண முடிபவர்கள் மட்டுமே, சிற்பங்களை செதுக்க முடியும். 2,000 அண்டுகளக்கு முன் சிற்பங்களைச் செதுக்கியவர்கள்கூட, தங்கள் பெயரை எங்கெயும் பதித்து வைக்கவில்லை. அவர்கள் வடித்த சிற்பமே, கையொப்பமாக இருந்தது.

கலைக்காகத் தங்களை முழுவதுமாக ஒப்படைத்தவர்கள், தங்கள் திறமை, இயற்கை வெளிப்படும் சாளரம் என்று கருதிக் கொண்டனர். எந்த இயந்திரமும், மின் விளக்கும் இல்லாத காலத்தில் அவை வடிக்கப்பட்டன. அவற்றைச் செதுக்குகிறபோது, துகள்கள் பட்டு, எத்தனை விழிகள் வெளிச்சத்ததையும், விரல்கள் துண்டித்தும். உயிர்கள் விண்ணகம் விரைந்ததை நினைக்கும் போது, அவை இன்னும் விஸ்வரூபம் எடுக்கின்றன.

ஒரே சிற்பத்தில் ஒரு புறத்திலிருந்து பார்த்தால் களிறும், மறுபுறம் காளையும் தெரிவது போல, பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ரதி சிற்பத்திலிருந்து பார்த்தால், மன்மதன் தெரிவதையும், மன்மதன் சிற்பத்திலிருந்து பார்த்தால், ரதி தெரியாமல் இருப்பது, எத்தனை இலக்கியச் சாரமும், உடலசைவு மொழியும் அவற்றில் கலந்திருப்பது தெரியும். இன்னொரு சிற்பம் வாலி வதையைக் குறிப்பது. ராமன் சிற்பத்திலிருந்து பார்த்தால் வாலி தெரியும், ஆனால், வாலியிலிருந்து பார்த்தால் ராமன் தெரியாது.

கற்சங்கிலிகள், கூந்தல், கால் நரம்புகள் தெரிகிற மாதிரி விக்கிரகங்கள் என்று, அவர்கள் செய்த சாதனைகள் சிலிர்ப்பை வர வைப்பவை. பதித்த கல்லில் நடனக் கலையை வெவ்வேறு முத்திரைகளுடன் செதுக்குவது எவ்வளவு சிரமம். செதுக்குவது சற்றுப் பிசகினால், கல்லே சிதைந்து விடும். அவ்வாறு சிற்பத்தை செதுக்கிற போது, தங்கள் உலகமே அந்தக் கல்தான் என்று நினைத்திருந்தால் மட்டுமே, அவை சாத்தியமாகி இருக்க முடியும்.

இந்தியச் சிற்பங்களின் அருங்காட்சியகமாக, மாமல்லபுரத்தை அழைக்கின்றனர். திறந்தவெளிச் சிற்பம், குடைவரைக் கோவில், ஒற்றைக்கல் கோபுரத்தை, ஓரிடத்தில் கண்டுகளிக்க, மாமல்லபுரமே மகத்தான இடம். தமிழக கோவில்களில், மீமெய்மை யியலைக் காண முடியும். தஞ்சைப் பெரிய கோவிலின் துவாரபாலகர்கள் அதற்கு எடுத்துக்காட்டு. கோபுர வாசலில் இருக்கும் வாயிற் காவலர்கள், மீமெய்மியலை உணர்த்துபவர்கள். அவர்கள் கால்களில், அரைஞாண் கயிறு போலத் தொங்கும் பாம்பின் வாயில் கவ்விய யானை, சூசகமான கலை வடிவம்.

யானை பல்லியைப் போல, பாம்பின் வாயில் தொங்குகிறது என்றால், அந்தப் பாம்பு எவ்வளவு பெரியதாக இருக்கும். அந்த பெரிய பாம்பு அரைஞாண் கயிறு போலத் துவாரபாலகர்கள் காலைப் பிணைத்திருந்தால் அது எவ்வளவு பிரமாண்டமாக இருக்க வேண்டும். அந்தத் துவாரபாலகர், 'உள்ளே இருக்கிறார் பெரியவர், அமைதியாக செல்லுங்கள்' என்று சொன்னால் அந்த இறைமை, இருத்தல் முழுமையையும் தன்னகத்தே கொண்டதாகத் தானே இருக்க வேண்டும்.

அங்கிருக்கும் சிவலிங்கம், வடிவில் பெரியது. கோவிலில் 108 நடனக் கரணங்களையும் கல்லில் செதுக்க எடுத்த முயற்சி உன்னதமானது. இங்கிருக்கும் சோழர் கால ஓவியங்களும், பின்னர் சேர்க்கப்பட்ட நாயக்கர் மற்றும் மராட்டியக் கோவில்களும் கண்களுக்கு விருந்து, கருத்துக்கு மருந்து. ஐந்தடி ஆழமே அஸ்திவாரமாகக் கொண்ட இந்தப் பெரிய பிரகதீஸ்வரர் கோவில், இன்றிருக்கும் பொறியாளர்களுக்கும் புதியாத சிருஷ்டி ரகசியம்.

கோவில், வெறும் கட்டடம் மட்டுமல்ல. பழங்காலத்தில் அதுவே அரசவை, நெற்களஞ்சியம், இயற்கை இடர்ப்பாடுகளின் போது புகலிடம், திருவிழாக்கள் நடக்கும் கூடம், ஆடல் பாடல் கலைகள் அரங்கேறும் மேடை, புலவர்கள் நூல்களை அறிமுகப்படுத்தும் அரங்கம். வடமாநிலங்களின் அரண்மனைகளுக்கு கொடுத்த

முக்கியதுவத்தை, தமிழக மன்னர்கள், கோவில்களுக்கு அளித்தனர். அதனால்தான், இங்கே அரண்மனை எதுவுமின்றி, கோவில்களே தொன்றுதொட்டு பராமரிக்கப்பட்டு, விருத்தியடைந்து காட்சியளிக்கின்றன.

தமிழ் எழுத்துக்களின் பரிணமா வளர்ச்சியை, கல்வெட்டுகளைக் கொண்டுதான் வரையறுக்க முடியும். தமிழ் பிராமிக் கல்வெட்டுகள், நம் மொழியின் மூலாதாரத்தையும், பழமையையும் பறைசாற்றுகின்றன. அவை அழிந்தால், நாம் புருவங்கள் இல்லாத உருவங்களாகி விடுவோம். இந்தச் சிற்பங்களை பார்க்க செல்கிறவர்கள் சிலர், சிற்பிகள்கூட தங்கள் பெயரை பதிக்காத சிற்பங்களில், தங்கள் பெயரை பதிக்க விரும்புகின்றனர். சிற்பங்களில் கோடுகளை கிழித்தும், நாசி, கை, கால்களை உடைத்து, ஏதோ சாதித்ததைப் போலத் திருப்தியடைகின்றனர். படையெடுப்பின் போது, உயிர் போனால் பரவாயில்லை, சிற்பங்களை காப்பாற்ற வேண்டுமென்று, புதைத்து, மறைத்து காப்பாற்றிக் கொடுத்தவற்றை கல் நெஞ்சக்காரர்கள் சிதைக்கின்றனர். தெப்பக்குளங்களில் குப்பைகளையும், பிரகாரங்களில் எச்சில் இலை போட்டு, தூண்களை கை துடைக்கும் துண்டுகளாக்குகின்றனர். வளாகத்தை சுற்றிய பாதைகளில் எச்சில் துப்பி, இயற்கை உபாதைகளை கழித்து, அகில், ஊதுபத்தி மணம் வீச வேண்டிய இடத்தில், துர்நாற்றத்திற்கு தூபம் போடுகின்றனர். இன்று நினைத்தால், ஒரு கோவிலை அல்ல, ஒரு தூணைக்கூட அதே தரத்துடன் படைக்க முடியாது.

அரிய கல்வெட்டு, கலை வடிவங்களை காப்பாற்றத் தவறினால், நாம் வறியவர்களாகி விடுவோம். மழையற்ற, மரமற்ற,கலையற்ற உலகம், பண்பாட்டு பாலைவனமாகி விடும். அங்கு ஒரு வினாடி கூட வாழ இயலாது. இந்தச் சிற்பங்களை மனதால்கூட காயப்படுத்த உரிமையில்லை. காற்று, மழை, கடலில் உப்புச் செறிந்த ஈரப்பதத்தோடு போராடி, தங்களை 'தக்க வைத்துள்ள அவற்றை சேதப்படுத்துவதால், நம்மை நாமே தாழ்த்தி கொள்கிறோம். இனியாவது சிற்பங்களை, எட்ட நின்று ரசிப்பதோடு, அவற்றின் மீது நம் விரல்கள் படுவது கூட தவிர்க்க வேண்டும். அவற்றிற்கு ஊறு விளைவிப்பவர்களை எச்சரிப்பது, அறிவுறுத்துவது நம் கடமை.

அங்கங்கே இருக்கிற ஊர் மக்கள், 'அந்தக் கலை வடிவத்தால் தான், எங்கள் ஊர்களுக்கு பெருமை' என்று, தங்களுக்குள்ளேயே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவற்றை பாதுகாக்க வேண்டும். கலை வடிவங்களை பாதுகாப்பது, மக்கள் இயக்கமாக மாற வேண்டும்.

சுற்றுலாத்துறை பல்வேறு இடங்களில், இது குறித்த பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்த கருத்தரங்கு, பள்ளி மாணவர்களின் எழுச்சி ஊர்வலம், தன்னார்வ தொண்டர்களின் தூய்மை முகாம்களையும் நடத்த இருக்கிறது.

❋❋❋

2

கொங்கு நாட்டு மன்றாடி

முனைவர் ர. பூங்குன்றன்
பதிவு அலுவலர்

(ஓய்வு)

கொங்கு நாடு சோழராட்சியில் சென்ற போது இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. வட கொங்கு, தென் கொங்கு என்பன அவை. இப்பிரிவுகளில் வட கொங்கு கொங்குச் சோழர் ஆட்சியிலும் தென் கொங்கு வீர கேரளர் ஆட்சியிலும் வைக்கப்பெற்றது. கி.பி. 1171-ஆம் ஆண்டிலிருந்து தென் கொங்கும், கொங்குச் சோழர் ஆட்சியின் கீழ் வந்தது. மன்றாடி, மன்றாட்டு ஆகிய சொற்கள் தென் கொங்கில் மிகுதியும் பயின்று வருகின்றன. வட கொங்குப் பகுதியில் வட பரிசார நாட்டில் கிடைக்கும் கல்வெட்டுகளில் இச்சொற்கள் பயின்று வரக் காணலாம். வெஞ்சமாங் கூடல் கல்வெட்டு மன்றாட்டுப் பற்றிக் கூறுகின்றது.

கொங்கு நாட்டில் கோவை மாவட்டத்துக் கல்வெட்டுகள் மன்றாட்டு பற்றி மிகுதியும் பேசுகின்றன. கொழுமம் குமரலிங்கம், சோழமாதேவி, கடத்தூர் கண்ணாடிபுத்தூர், பேரூர், ஆனைமலை, போளுவாம்பட்டி, என்னூர், சேவூர், அவினாசி, திருமுருகன்பூண்டி முதலில் ஊர்க்கல்வெட்டுகளில் மன்றாட்டு பற்றிய கல்வெட்டுகளில் கோயிலுக்குத் தேவதானமாக அளிக்கப் பெற்ற ஊர்களின் பெருமை சிறுமைக்கேற்ப இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு எனப்பல மன்றாட்டுகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளன. மன்றாட்டு என்ற பிரிவு எதைக் குறிக்கின்றது? நிலப்பகுதியா? ஊர் வருவாயில் பங்கா என்பதைக் கண்டறிய வேண்டும். ஒரு மன்றாட்டினை ஒருவருக்கோ, இருவருக்கோ, பலருக்கோ அளித்துள்ளனர். பூலுவருக்கு மட்டும் மன்றாட்டு அளிக்கப் பெறவில்லை. இது ஒரு புதிராக உள்ளது.

மன்றாட்டினை எண்ணிட்டுக் கூறுவதைப் போலவே ஊராண்மையையும் எண்ணிட்டுக் கூறியுள்ளனர். ஊராண்மையைப் பெற்றவர் ஊரானி எனப்பெற்றார். ஊரானி, நிலம் தொடர்பான ஆவணங்களில் கையொப்பமிட்டுள்ளான். ஆனால் மன்றாடி கோயில் தொடர்பான நிருவாகத்தின் பங்கேற்றுள்ளான். இரண்டு நிருவாக அமைப்பும் (ஊராண்மை, மன்றாட்டு) தனித்தனி அமைப்புகள் பூலுவர்களுக்கு மட்டும் ஊராண்மைக்காணி அளிக்கப்பெற்றுள்ளது. மன்றாடி பற்றி தமிழகம் முழுவதும் கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

தொண்டை நாட்டுக் கல்வெட்டு ஒன்று 'ஆமூர் கோட்டத்துக் கோட்டமன்றாடிகள்' என்று கூறுகின்றது. மேலும் கோயிலுக்குக் கொடையாக வந்த கால்நடைகளைப் பெற்றுக் கொண்டு நெய்யளக்கும் பணியினை மன்றாடிகள் செய்துள்ளனர். எல்லாப் பகுதிகளிலும் மன்றாடி பற்றிக் குறிப்புகள் கிடைத்தாலும், ஒவ்வொரு பகுதியிலும் வேறுவேறு பொருளில் அச்சொல் வழங்கப்பெற்றது. கால்நடை வளர்ப்புடன் நெருங்கிய தொடர்புடைய கொங்கு நாட்டில் மன்றாடி என்ற சொல் கோயில் நிருவகத்தோடு தொடர்புடைய சொல்லாகப் பயன்படுத்தப் பெறுகின்றது.

கொங்கு நாடு முல்லையும் குறிஞ்சியும் நிறைந்த பகுதி. இப்பகுதியில் கால்நடை வளர்ப்பு மேலோங்கி நின்றது. கொங்கு நாட்டு நீர்வளப் பகுதியில் முல்லை திரிந்த மருதமாக எழுச்சி பெற்றாலும் முல்லை இயல்பே மேலோங்கி நின்றது. புறப்பாடல் ஒன்று கன்று நிறையும் மன்று என்கோ என்று கூறும். இது போன்ற மன்றுக்குரியவன் என்ற வகையில் மன்றாடி எனப்பெற்றான். மன்று என்பது கால்நடை தங்கியிருக்கும் நிலத்தையும், மேய்ச்சல் நிலத்தையும் குறித்து வந்தது. மேய்ச்சல் நிலத்திற்குரியவன் மன்றாடி எனப்பெற்றான்.

கொங்கு நாட்டில் பண்டைக் காலந்தொட்டு கால்நடை வளாப்பு சிறப்புற்றிருந்தது. அத்தொழிலில் உயர்வு பெற்றவர்களே மன்றாடிகள். மன்றிற்கும், கால்நடை வளர்ப்பிற்குமிடையிலான தொடர்பு படிப்படியாகக் குறைந்து சிறிதுசிறிதாக அற்றுப் போயிருக்கலாம். மன்றம், மன்றாடி ஆகிய சொற்கள் மாறிய சூழ்நிலையில் மாறிய பொருளைத் தந்திருக்கலாம். மன்றாட்டு, மன்றாடி ஆகிய சொற்களைக் கொண்டுள்ள கல்வெட்டுகள் ஐம்பதுக்கும் மேல் கிடைத்தாலும், திருமுருகன்பூண்டிக் கல்வெட்டு ஒன்று இச்சொற்களை விளங்கிக் கொள்ள உதவுகின்றது. அக்கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:

"நம்மை சூழ் ஆழ்வான் அண்ணாமலையானுக்கு நம் ஓலை குடுத்தபடியாவது உடையார் திருமுருகன்பூண்டியாளுடைய நாயனார் கோயில் தானத்தாருடன் இக்கோயிலும் கேட்டு ஊர் மன்றாட்டு குடுக்கையில் இவன் இக்கோயிற் திருப்பணிக்கு இவன் இட்ட பொன் இரு நூறும் அவன் அடைப்பிக்கின்ற அழியா விரதங்கொண்டான் குளம் நீங்கலாக இடுகையில் இவனுக்கு நாங்குடுத்த தானத்தார் மன்றாட்டு ஒன்று இம்மன்றாட்டு ஒன்றும் முன்பே நடந்து போதும் தானத்தார் மன்றாட்டு ஞைசும் ஆகத்தானத்தார் மன்றாட்டு ஆறு இம்மன்றாட்டு ஆறுங்கூட நடந்து கோயிலும் கேட்டு ஊருங்கால் பாடும் மன்றாட்டும் ஆண்டு ஊருங்கால்பாடும் நாற்பாற்கெல்லைக்குட்பட்ட நன்செய் புன்செய் மேனோக்கின மரங்கீணோக்கினகிணறும் எழுவன முளைப்பான மற்றும் எப்பேற்பட்ட ஸர்வ பிராப்திகளும் ஆறு மன்றாட்டிலே வகையிட்டு ஆறிலொன்று இவன் மக்கள் மக்கள் சந்திராதித்தவரை அனுபவித்து வருவாளாகவும்".

இக்கல்வெட்டு மன்றாடு, மன்றாடி ஆடும் சொற்களைப் புரிந்து கொள்ள பல வகையிலும் உதவி செய்கின்றது. மன்றாட்டு என்பது ஊரிலிருந்த மேய்ச்சல் நிலத்தில் இருந்த பங்கு என்பதும், அந்தப் பங்கிற்குரியவன் மன்றாடி என்பதும் தெரிய வருகின்றது. மேய்ச்சல் வாழ்க்கை பின்னுக்குத் தள்ளப்பெற்று வேளாண் வாழ்க்கை பெருமை பெற்ற பின்னும் இச்சொற்கள் பயன்பாட்டிலிருந்தன. ஆனால் மாறிய பொருளியல் சூழ்நிலையில் மாறிய பொருளில் வழங்கின.

3

ஆதிச்சநல்லூரும், அழகன்குளமும் ஓர் ஒப்பீடு

தொல்லியலறிஞர் **நடன. காசிநாதன்**
தமிழ்நாட்டரசு தொல்லியல் துறை மேனாள் இயக்குநர்

தமிழகத்தில் இதுவரை சற்றேறக்குறைய 100 இடங்களில் அகழாய்வு நடைபெற்றிருக்கிறது. இவ்வகழாய்வுகளை நடுவண் அரசு தொல்லியல் துறை, மாநிலத் தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்கள் மேற்கொண்டிருக்கின்றன.

அகழாய்வு நடைப்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் தமிழ்ப்பண்பாட்டின் முக்கியத் தடயங்களைப் பெருமளவில் தந்திருப்பவை புதுவை மாநிலம் - அரிக்கமேடு, திருச்சி மாவட்டம் - உறையூர், காஞ்சிபுரம் மாவட்டம் - காஞ்சிபுரம், தஞ்சை மாவட்டம் - பூம்புகார், ஈரோடு மாவட்டம் - கொடுமணல், கரூர் மாவட்டம் - கரூர், தூத்துக்குடி மாவட்டம் - ஆதிச்சநல்லூர், கொற்கை; இராமநாதபுரம் மாவட்டம் - அழகன்குளம் ஆகியவைகளாகும்.

தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூர், திருநெல்வேலி - திருச்செந்தூர் சாலையில், திருநெல்வேலியிலிருந்து 24 கி.மீட்டர் தொலைவில், தென்கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. இவ்வூரின் மேற்குப் பகுதியில் தாமிரபரணி ஆற்றின் தென் பகுதியில் ஒரு மேட்டுப் பகுதி காணப்பெறுகிறது. இம்மேட்டுப்பகுதியில் முதுமக்கள் தாழிகள் அதிக அளவில் காணப்படுவதால், இது "தாழிக்காடு" என்று அழைக்கப்படுகிறது.

இத்தாழிக்காட்டில் முதன்முதலில் 1876-ஆம் ஆண்டிலும், பிறகு 1899-லும், அதன் பின்னர் 1903 - 1904-லும், அதற்குப் பிறகு 1906-லும், பிறகு 1914-லும் வெளிநாட்டினரால் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.[1] அண்மையில் 2004 - லிருந்து இந்திய நடுவண் அரசு தொல்லியல் துறை இங்கு இரண்டு ஆண்டுகள் அகழாய்வை நடத்தியது.[2]

1914 முடிய நடைபெற்ற அகழாய்வுகளில் சற்றேறக்குறைய 9000 தொல்பொருட்கள் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றன. அவைகளுள் முக்கியமானவை ஈமத்தாழிகள், வெண்கல சாடிகள், வேலைப்பாடு மிகுந்த மூடியுடைய கிண்ணங்கள், குடுவைகள், சல்லடைக் கிண்ணங்கள், தங்க நெற்றிப்பட்டங்கள், தாய்த் தெய்வச் செப்புத் திருமேனி, இரும்பாலான ஓரிலை மற்றும் மூவிலை வேல்கள், தொங்கு விளக்குகள் ஆகியவைகளாகும்[3]

2004 மற்றும் 2005-ஆம் ஆண்டுகளில் நிகழ்த்தப் பெற்ற அகழாய்வு 150-க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள், பல்வகை கறுப்பு, சிவப்பு மற்றும் கறுப்பு நிற மட்பாண்டங்கள், செப்பு வளையல்கள், செப்பு உளிகள், இரும்பாலான ஈட்டி, கத்தி, நெல் உமி, கேழ்வரகு, வரகு உமி, அரிசி மற்றும் புதிய கற்காலக் கருவிகள், ஒரு தாழியின் உட்பக்கம் எழுதப் பெற்றிருக்கும் தமிழ் வாசகம், தாழியின் உள்ளேயிருந்த ஒரு மட்கல ஓட்டில் ஒட்டு வேலைப்பாட்டில் காணப்பெறும் சிற்பக் காட்சி, பானையோடுகள் மீதான உருவக்குறியீடுகள், தொன்மைத்தமிழ் எழுத்துக்கள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டியவைகளாகும்.[4]

இவ்வகழாய்வின் இயக்குநராகச் செயல்பட்ட முனைவர் சத்தியமூர்த்தி, இங்கு கிடைக்கப்பெற்ற பொருட்களையும், தாழி அமையப்பெற்றிருந்த பாள நிலைகளையும் கருத்தில் கொண்டு, கீழ்காணும் முடிவுகளைத் தெரிவித்திருக்கிறார். "இந்த இடம் தமிழகத்தில் மிகவும் பழமைவாய்ந்த இடம், இதன் காலம் கி.மு. 1000 அளவுக்குச் செல்லும், இந்த அகழாய்வில் பெருங்கற்காலக் பண்பாட்டைவிட முந்தைய பண்பாட்டைக் காண முடிகிறது. இப்பண்பாடு சரியான பாள நிலையில் உள்ளது. இங்கு கிடைத்துள்ள பானை ஓடுகள் பெருங்கற்காலப் பானையோடுகளிலிருந்து வடிவத்தில் வேறுபட்டவை"[5]

ஆதிச்சநல்லூரில் வெளிநாட்டார் மேற்கொண்ட அகழாய்வுகளில் வெளிக் கொணரப்பெற்ற வெண்கலப் பொருட்களான எருமை, புலி, செம்மறி ஆடு, ஆடு, சேவல், மான் போன்ற விலங்குளின் உருவங்களும், பறவை உருவங்களும் மகாராட்டிர மாநிலத்திலுள்ள அரப்பன் நாகரிக இடமான டைமாபாத்தில் கிடைத்திருக்கும் செம்பாலான எருமை, யானை, காண்டாமிருகம் போன்ற விலங்குகளும், ஆதிச்ச நல்லூருக்கும், டைமாபாத்துக்கும் யாதோ ஒருவகையில் ஒற்றுமை உள்ளது என்பதைப் புலப்படுத்துகின்றன என்று கலாநிதி சி.க.சிற்றம்பலம் கூறியிருக்கிறார்.[6]

கலாநிதி சி.க. சிற்றம்பலத்தின் அநுமானத்துக்கு வலிமை கூட்டும் வகையில் முனைவர் எஸ்.குருமூர்த்தி கூறியிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சுற்றியுள்ள பகுதியில் செப்புக் காலத்திலிருந்து இரும்புக் காலத்திற்கு மாறும் பண்பாட்டு மாற்றம் நிகழ்ந்திருக்கும் என்று தெரிவித்து, அதற்கான சான்றுகளாகக் கொற்கை மற்றும் ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கிடைத்துள்ள கறுப்பு, சிவப்புப் பானை வகையைச் சார்ந்த கெண்டி போன்ற கிண்ணங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அத்தோடு அவை மத்திய இந்தியா மற்றும் அரப்பன் நாகரிகக் காலப் பானை வகைகளைப் போன்றுள்ளன என்றும் தெரிவித்திருக்கிறார்.[7]

முதுமக்கள் தாழி புதைப்பு வழக்கம் பற்றிக் குறிப்பிடுகையில், அவை தென்னிந்தியாவில் புதிய கற்காலம் அளவுக்குப் பழமை வாய்ந்தது என்றும் மற்றோர் இடத்தில் அவர் எழுதியிருக்கிறார்.[8]

ஆதலால் ஆதிச்சநல்லூர் பண்பாட்டுக் காலம் தென்னிந்தியாவில் வேறு எங்கும் காண இயலாதச் செப்புக்காலம் தொடங்கி, பின்னர் புதிய கற்காலம், அதற்குப் பின்னர் இரும்புக் காலமான பெருங்கற்காலத்தின் தொடக்கக் காலத்தைச் சார்ந்தது என்று கொள்வதே சரியாகப்படுகிறது. புதிய கற்காலத்தின் தடயமான வழவழப்பான கற்கோடரிகள் அண்மையில் மேற்கொண்ட அகழாய்வில் கிடைத்திருப்பது இப்பகுதியில் செப்புக் காலமும், புதிய கற்காலமும் இணைந்தே நிலவியிருக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறது. கொடுமணல் பகுதியும் இதைப் போன்ற பண்பாடு நிலவிய பகுதியே ஆகும். ஆதலால்தான் அங்கும் செம்பினால் செய்யப்பெற்ற புலி உருவம் மற்றும் சாம்பிராணி கிண்ணம் போன்றவை இரும்புப் பொருட்களோடு கிடைத்திருக்கின்றன.[9]

மேற்கூறப்பெற்ற கருத்துக்கு மேலும் அரணாக விளங்குபவை ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள தங்க அணிகலன்கள், செப்புத் தாய்த் தெய்வத் திருமேனி, வளர்ச்சி பெற்ற உருவ எழுத்துக்கள் பொறிக்கப் பெற்ற பானையோடுகள் (Graffiti), ஒரு பானையில் பதிக்கப் பெற்றுள்ள பெண் உருவம் மற்றும் மான், நாரை, முதலை, வாழைமரம் உருவங்கள். அவை புதிய கற்கால மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பவை ஆகும். ஆற்றோர நாகரிகத்தை உணர்த்துவதாகும். ஆற்றோரங்களிலும், ஆற்றிலும் காணப்பெறும் வாழைமரம், நாரை, முதலைகள் இதற்குச் சான்றாக விளங்குகின்றன. பெண் உருவம் கொற்றவையாகவோ அல்லது தாமிரபரணி ஆற்றின் தெய்வமாகவோ இருக்கலாம். கொற்றவையாக இருப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது. ஏனெனில், பெண் உருவத்துக்கு அருகில் மான் உருவம் காணப்பெறுவதாலாகும். மான் கொற்றவையின் ஊர்தி. கொற்றவை உருவம் இங்கு காணப்படுவதால் இவ்விடத்தில் ஒரு போர் நடைபெற்று, அதில் உயிர் நீத்த போர்வீரர்களின் உடல்களைத் தாழியில் வைத்து அடக்கம் செய்யப்பெற்ற இடமாக "இத்தாழிக்காடு" இருந்திருக்கலாம். இக்கொற்றவை உருவம்தான் தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள கொற்றவை உருவங்களில் மிகப் பழமையானதாக இருக்கும். இச்சிற்பக்காட்சி அகத்தையும், புறத்தையும் ஒருசேரக் காண்பிக்கும் மிகச்சிறந்த ஒரு காட்சியாக அமைந்திருக்கிறது. இதுபோன்ற அகத்தையும், புறத்தையும் ஒரே நேரத்தில் காண்பிக்கக்கூடிய ஒரு சிற்பமோ அல்லது ஓவியமோ இதுவரை தமிழகத்தில் கிடைத்ததாகத் தெரியவில்லை.

ஆதிச்சநல்லூர் செம்பு, வெண்கலம், தங்கம், இரும்பு ஆகியவை கொண்டு பொருட்கள் செய்யப்பெற்று, உள்நாட்டு வணிகத்தில் தமக்கென ஒரு தனி இடத்தை ஏற்படுத்திக் கொண்ட வணிக நகரமாக விளங்கியிருக்கிறது.

அண்மையில் நிகழத்தப் பெற்ற அகழாய்வில் 150-க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் கிடைக்கப் பெற்றதோடு, அவை அமைக்கப் பெற்றிருந்த முறையும் அந்நாகரிகத்தின் பழமையைப் பறை சாற்றுவதாக உள்ளது. குன்றில் பத்து மீட்டர் ஆழம் தோண்டி, முதல் பண்பாட்டுத் தாழிகளைப் புதைத்திருப்பது அப்பண்பாட்டு மக்கள் தொடக்கத்தில் மலையையொட்டிய வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டவர்கள் என்பதை மெய்ப்பிக்கிறது. அதுதான் புதிய கற்கால வாழ்க்கை முறை. ஆற்றோர நாகரிகத்தை அவர்கள் தொடங்கிவிட்டாலும், தங்களது பண்டையப் பண்பாட்டு முறையை மறக்காமல் இருந்திருக்கின்றனர் என்பதைக் காட்டுவதாக அம்முறை உள்ளது.

இதைப் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள அகழாய்வை நடத்தியத் தொல்லியலாளர், தமிழகத்தில் இதுபோன்று ஒட்டுருவம் வேறெங்கும் கிடைக்கவில்லை என்றும், ஓவியங்களில் இதுபோன்று காணப்பெறுகிறது என்றும் கூறியிருக்கின்றார்.[11] இது சரியான கருத்தாகப்படவில்லை. நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரையடுத்த மேலப்பெரும்பள்ளத்தில் முதுமக்கள் தாழி மீது ஒட்டப்பெற்றிருந்த மூதாட்டி உருவமும், விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் அகழாய்வில் கிடைக்கப் பெற்ற ஒரு பானைப் புறப்பகுதியில் ஒட்டப்பெற்ற பெண் உருவமும்,[12] இராமநாதபுர மாவட்டம், அழகன்குள அகழாய்வில் சிவப்பு நிற பானைமீது ஒட்டப்பெற்ற ஆப்ரிக்க நாட்டு பெண்களின் சாயலுடைய மூன்று பெண் உருவங்களும்,[13] மற்றும் அங்கேயே கிடைத்திருக்கின்ற ரௌலட்டட் வகை கிண்ணத்தின் கைப்பிடியில் ஒட்டப்பெற்றுள்ள தாய், சேய் உருவமும்[14] ஆதிச்சநல்லூரில் கிடைப்பதற்கு முன்னமேயே கிடைத்திருக்கின்றன.

ஆதிச்சநல்லூரில் கிடைத்திருக்கும் தாழிகளில் ஒன்றின் உட்புறத்தில் தொன்மைத் தமிழ் மொழியில் ஒரு சொல் தொன்மைத் தமிழ் எழுத்தில் எழுதியிருப்பது மிகமிக முக்கியமான கண்டுபிடிப்பாகும்.[15] இக்கண்டுபிடிப்பு பற்றி அவ்வகழாய்வை நடத்திய முனைவர் சத்தியமூர்த்தியும், நடுவணரசு கல்வெட்டியல் துறை மேனாள் இயக்குநர் முனைவர் எம்.டி. சம்பத்தும் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்திருப்பதும், அக்கல்வெட்டோடு உடைய தாழியின் படமும் தமிழகத்தின் தலை சிறந்த நாளிதழான இந்து பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றன. அக்கல்வெட்டின் காலம் தர்மோலூமினசென்சு கணிப்புப்படி கி.மு. 500-க்குப் பின்பாகக் கொண்டு வரமுடியாது என்று முனைவர் சத்தியமூர்த்தி கூறியிருக்கிறார். இக்கண்டுபிடிப்பு மூலம் நம் தமிழ் எழுத்தும், தமிழ் மொழியும் இற்றைக்கு 2600 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பது தெரிய வந்துள்ளது.

ஆனால், இக்கண்டுபிடிப்பை இல்லை என்று கூறும் வேலை தற்பொழுது மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்குச் சில பேராசிரியர்களும் துணை போகிறார்கள் என்பது வேதனையளிக்கிறது. இல்லை என்பதை உறுதி செய்ய ஒரு பேராசிரியர் (1) முதுமக்கள் தாழியில் தொன்மைத் தமிழ் எழுத்து எழுதப் பெற்று இதுவரை காணப்பெறவில்லையென்றும், (2) அதிலும், பானையின் உட்பக்கம் தொன்மைத் தமிழ் எழுதப்பெறும் வழக்கம் பானைமூடிகள் போன்ற ஒரு சிலவற்றைத் தவிர இதுவரை தெரியவரவில்லை என்றும் தம் ஆய்வுக் கட்டுரையில் வெளிப்படுத்தியிருக்கிறார்.[16]

முதலாவதாக, தாழியில் தொன்மை எழுத்து எழுதப் பெறவில்லையென்பது, கரூரிலும்,[17] கொற்கையிலும்[18] நிகழ்த்தப் பெற்ற அகழாய்வுகளில் தாழியில் எழுதப் பெற்று கிடைத்திருப்பது அவர் கவனத்துக்குச் செல்லவில்லை போன்று தெரிகிறது.

இரண்டாவதாகப் பானையின் உட்புறம் (மூடிப்பகுதியைத் தவிர) தொன்மைத் தமிழ் எழுத்து எழுதப்பெறவில்லை என்பது அழகன்குளத்திலும்,[19] கரூரிலும்[20] கிடைத்திருக்கும் பானையோடுகளை அவர் கருத்தில் கொள்ளவில்லை போன்று தெரிகிறது. மேலும், அழகன்குளத்தில் ஒரு பானை ஓட்டில் அவ்வோடு சுடப்படுவதற்கு முன்பாகவே எழுதப்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.[21]

ஆதலால், ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழியில் உட்புறத்தில் எழுதியிருந்தது உண்மையிலும் உண்மையாகும்.

இங்கு மக்கள் வாழ்விடப் பகுதியும், அண்மைக்கால அகழாய்வில் கண்டுபிடிக்கப் பெற்றிருக்கிறது. அப்பகுதியில் வீட்டின் தரைப்பகுதியும், மேற்கூரையைத் தாங்கும் மரத்தூண்கள் நடுவதற்காகத் தோண்டப் பெற்ற குழிகளும் தெரியவந்துள்ளன.

இங்கு நிகழ்ந்த மற்றொரு முக்கியக் கண்டுபிடிப்பு கருப்பு சிவப்புப் பானையோட்டின் மீது காணப்பெறும் ஒரு குறியீடாகும்.[22] இது தலைகீழாக வரையப் பெற்றுள்ளது  இக்குறியீட்டை ஒளிப்படத்தில் இவ்வாறு காணமுடிகிறது. இக்குறியீடு அரப்பன் நாகரிகக் கால உருவங்களோடு ஒப்பிடக்கூடியதாக உள்ளது. மேலும் அழகன்குளத்தில் கிடைத்திருக்கும். பானையோட்டுத் தாயக்கட்டையில் காணப்பெறும் உருவங்களுக்கும், இதற்கும் ஒற்றுமை காணப்படுகிறது. இத்தாயக் கட்டை உருவங்களை இக்கட்டுரை ஆசிரியர் எண். 1, 2, 3 என்று கணித்திருக்கிறார்.[23] இக்குறியீடும் அதைப் போன்ற ஒரு எண்ணைக் குறிப்பதாக இருக்கலாம். பெரும்பாலும் எண்."5"-ஐக் குறிப்பதாகலாம்.

இங்கு கிடைத்துள்ள மற்றொரு தாழியின் வெளிப்புறத்தில் பந்து போன்ற இரு புள்ளிகளும், அவற்றின் நடுவிலிருந்து மூன்று கோடுகளும் வனையப் பெற்றிருக்கின்றன. இதையும் ஒரு குறியீடு (Graffiti) என்று கூறப்பெற்றிருக்கிறது[24] அது குறியீடு அல்ல, ஒரு முகத்தின் இரு கண்களும், மூக்கும் ஆகும்.

மேற்கூறப்பெற்ற பல வகைகளில் இவ்வாதிச்சநல்லூர் பண்பாடு தமிழகத்தில் நிலவிய செப்புக்கால, புதிய கற்கால, பெருங்கற்காலப் பண்பாடுகளை வெளிப்படுத்தும் பண்பாடாகும். இது ஆற்றங்கரை நாகரிகத்துக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தமிழர்கள் வாழ்ந்த வாழ்க்கையை நம் கண்முன்னே கொண்டு வரும் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க பகுதியாக ஆதிச்சநல்லூர் விளங்கி வருகிறது.

அடுத்து தமிழகக் கீழைக் கடற்கரையோரம் வைகையாறு கடலில் கலக்கும் இடத்தில் அமைந்து ஒரு சிறந்த துறைமுக நகரமாக விளங்கிய அழகன்குளத்தைக் காண்போம். இங்கு இரண்டு கட்டங்களில், அதாவது 1986-87-லும், 1990-91-லிருந்து 1997-98 முடியவும் அகழாய்வு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப் பெற்றது. முதல் கட்ட அகழாய்வில் முனைவர் இரா. நாகசாமியும், இரண்டாம் கட்ட அகழாய்வில் இக்கட்டுரை ஆசிரியரும், அகழாய்வு இயக்குநர்களாகவும் இருந்து அகழாய்வை வழி நடத்தினர்.[25]

இவ்வகழாய்வுகளின் மூலம் இத்துறைமுகப்பட்டினம் கி.மு. 500-லிருந்து கி.பி. 1200 முடிய இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரத்தை ஒட்டிய பகுதியில் சிறந்து விளங்கியிருக்கிறது என்பது அறிய முடிகிறது.

கி.மு. 500-300-ஐச் சார்ந்த பாளநிலையில் சிவப்பு, கறுப்பு சிவப்பு, பாய் உருவப் பதிப்பு, வட இந்திய கறுப்பு வழவழப்பான பானையோடுகள் கிடைத்திருக்கின்றன. கி.மு. 300 - கி.பி. 100 காலத்தைய பாள நிலையில் சிவப்பு, கறுப்பு சிவப்பு, ரௌலட்டட், பாய் உருவப்பதிப்பு, சாம்பல் நிற, தொன்மைத் தமிழ் எழுத்துப் பொறித்த, முத்திரை பதிக்கப்பெற்ற, உரோமானிய மதுக்குடுவையைச் சார்ந்த பானையோடுகள் தெரிய வந்துள்ளன.

இதற்கு மேலுள்ள பாள நிலையில் அழகன் குளத்திலேயே தயாரிக்கப்பெற்ற சிவப்பு ரௌலட்டட் பானையோடுகள் சேகரிக்கப் பெற்றுள்ளன. இதற்கும் மேலுள்ள பாள நிலையில் சீன பீங்கான் ஓடுகள் காணப்பெற்றன.[26]

இப்பாள நிலைகளிலிருந்து கிடைக்கப் பெற்ற தொல்பொருட்களுள் முக்கியமானவை வட இந்திய கறுப்பு வழவழப்பான பானையோடுகள், முத்திரை பதிக்கப் பெற்ற வெள்ளிக்காசு, சங்ககாலப் பாண்டியர் செப்புக் காசுகள், மேற்காசிய நாடுகளின் சாம்பல் நிறப்பானை ஓடுகள், பாய் வடிவம் பதித்த பானையோடுகள், அரைட்டின் பானையோடுகள், ரௌலட்டட் ஓடுகள், ஆம்பொரா வகை ஓடுகள், வெளிப்பக்கம் மூக்குள்ள (கெண்டி) பானையோடுகள், அழகன்குளம் ரௌலட்டட் ஓடுகள், கப்பல் உருவம் பொறித்த பானையோடுகள், கிண்ணங்கள் உட்பக்கம் இலை வடிவம் பதித்த பானையோடுகள், காளை உருவம் பதித்த ஓடு, குதிரை மீது ஏறிச் செல்லும் மனிதன் உருவம் உடைய ஓடு, யானை உருவம் வரையப் பெற்ற ஓடு, அரப்பன் கால உருவங்கள் பதித்தத் தாயக் கட்டை (ரௌலட்டட் கலத்தின் உதட்டுப் பகுதியால் செய்யப் பெற்றது). ஆப்ரிக்க நாட்டுப் பெண்கள் பாவனையில் உள்ள மூன்று பெண் உருவங்கள் ஒட்டப்பெற்ற பானையோடு, ஹெலனிஸ்டிக் கலை வடிவில் உள்ள ஒரு தாயும், சேயும் ஒட்டுருவமாகக் காணப்பெறும் ஒரு கிண்ணத்தின் கைப்பிடி, உரோமானியக் காசுகள், 408 என்ற எண்ணோ அல்லது 804 என்ற எண்ணோ எழுதப் பெற்ற ஒரு பானையோடு போன்றவைகளாகும். இவ்வெண்கள் பிற்காலத்தியவை. அதாவது கி.பி. 12-ஆம் நூற்றாண்டாகலாம்.

தொல்பொருட்கள் கிடைத்துள்ள வகையில் அழகன்குளம், புதுவை மாநிலம், அரிக்கமேடு துறைமுகத்தோடு ஒப்பிடக்கூடிய வகையில் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கிய ஒரு துறைமுகமாக விளங்கியிருக்கிறது. இங்கும் அரிக்கமேடு, பூம்புகார் ஆகிய துறைமுகங்களில் மேல்நாட்டு வணிகர்கள் வந்து தங்கியிருந்தது போன்று வந்து தங்கியிருந்திருக்கின்றனர். அவர்கள் இங்கு தங்கியிருந்தபோது பயன்படுத்திய கப்பல் உருவத்தை ஒரு பானையோட்டில் வரைந்திருப்பது மிக முக்கியச் சான்றாகும். அதேபோன்று தங்கள் (Hellenistic Style) கலைப்பாணியில் சில மனித உருவங்களை ஒட்டுருவங்களாக மட்கலன்கள் மீது பதித்திருப்பதும் அவர்களது உறவு தமிழ்நாட்டோடு நெருக்கமாக இருந்தது என்பதைப் புலப்படுத்துகிறது. அழகன்குளம், கீழ்த்திசை நாடுகளோடும் மற்றும் இலங்கையோடும் பண்பாட்டு மற்றும் வணிக உறவு கொண்டிருந்தது என்பதற்கு இங்கு கிடைத்திருக்கும் பானையோடுகளில் எழுதப்பெற்றுள்ள தொன்மைத் தமிழ்ச் சொற்களால் தெரிய வருகிறது.

அரப்பன் நாகரிகத் தாயகம் தமிழகம்தான் என்பதை உணர்த்தும் வகையில் அக்கால உருவ எழுத்தின் வளர்ச்சி பெற்ற எழுத்துக்கள் (Phonograph) பொறிக்கப் பெற்ற பானையோடுகளும், மட்கல உதட்டினால் செய்யப்பெற்ற ஒரு தாயக்கட்டையும், ஒரு பானை ஓட்டில் "லதிக ⊞ ஈ" என்ற சிதைந்த சொல்லின் நடுவில் அரப்பன் நாகரிகம் உருவ எழுத்து பொறிககப் பெற்றிருப்பதும் கிடைத்திருப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

தமிழகம் கி.மு. 6-5-ஆம் நூற்றாண்டிலிருந்தே இந்தியாவின் கங்கைப் பகுதியோடு பண்பாடு மற்றும் வணிக உறவு கொண்டிருந்ததை அழகன்குளத்தில் கணிசமான அளவில் கிடைத்துள்ள வட இந்தியக் கறுப்பு வழவழப்பான ஓடுகளிலிருந்து (NBP sherds) தெரிந்து கொள்ளலாம்.

எல்லாவற்றையும் கருத்தில்கொண்டு பார்க்கையில் அழகன்குளம் சங்ககாலப் பாண்டியர்களுக்கு, கொற்கைத் துறைமுகம் போன்று மிக முக்கியத் துறைமுகமாகச் செயல்பட்டிருக்கிறது.

அழகன்குளம் அகழாய்வில் சேகரிக்கப்பெற்ற கரியினை C14 முறையில் ஆய்ந்ததில் மிகப் பழமையான பாளநிலை கி.மு. 360 அல்லது கி.மு. 160 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.[27] வட இந்திய கறுப்பு வழவழப்பான பானை ஓடுகள் மற்றும் வெள்ளி மற்றும் செம்பு முத்திரை பதித்த காசுகள் இவ்வகழாய்வில் கிடைத்துள்ளதால் கி.மு. 360 என்று கொள்வதே சரியானதாகும்.

ஆதிச்சநல்லூரையும், அழகன்குளத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் கீழ்க்காணும் செய்திகள் வெளிப்படையாகத் தெரிய வருகின்றன.

1. ஆதிச்சநல்லூர் ஒரு ஆற்றங்கரை நாகரிக நகரம். அழகன்குளம் கடற்கரையில் அமைந்த துறைமுகப்பட்டினம்.
2. ஆதிச்சநல்லூர் உள்நாட்டோடு மட்டும் வணிக உறவு கொண்ட நகரம். அழகன் குளம் உள்நாடு மற்றும் மேற்காசிய, கிழக்காசிய, இலங்கை ஆகிய நாடுகளோடு உறவு கொண்ட துறைமுகம்.
3. ஆதிச்சநல்லூர் செம்புக் கால, புதிய கற்கால, பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த நகரம். அழகன்குளமோ பெருங்கற்கால இறுதிக்காலம் (சங்ககாலம்) மற்றும் வரலாற்றுக் கால மக்கள் வாழ்ந்த துறைமுகம்.
4. ஆதிச்சநல்லூர் ஒரு தொழிற்கூட நகரம். தங்கம், செம்பு, வெண்கலம் மற்றும் இரும்புப் பொருட்கள் அதிக அளவில் செய்யப்பெற்று உள்நாட்டோடு விற்பனை நடத்திய நகரம்.

அழகன்குளத்திலிருந்து உள்நாட்டுப் பொருட்கள் வெளிநாடுகளுக்குச் செல்லவும், வெளிநாட்டுப் பொருட்கள் உள்நாட்டுக்கு வரவும் உதவிய ஒரு துறைமுகப்பட்டினம். இங்கு சங்கு வளையல்களும், அழகன்குள மஞ்சள் நிற ரௌலட்டட் மட்கலன்களும் தயாரிக்கப் பெற்ற இடம்.

5. ஆதிச்சநல்லூரில் அரப்பன் கால உருவ எழுத்தின் வளர்ச்சி பெற்ற உருவங்கள் பொறிக்கப்பெற்ற பானை ஓடுகளும், தொன்மைத் தமிழ் எழுத்துப் பொறிக்கப் பெற்ற ஓடுகளும் மிகக் குறைந்த அளவிலே கிடைக்கப் பெற்று பெருங்கற்காலத்தின் தொடக்க நிலையைக் காட்டுவதாக உள்ளது. ஆனால், அழகன்குளம், மேற்குறிக்கப்பட்ட உருவங்களும், தொன்மைத்தமிழ் எழுத்துக்களும் மிகுந்த அளவில் பொறிக்கப் பெற்ற பானை ஓடுகள் கிடைக்கப் பெற்று பெருங்கற்காலத்தின் இறுதிக்கட்ட நிலையையும், வரலாற்றுக் காலத்தையும் காட்டுவதாக உள்ளது.

6 ஆதிச்சநல்லூரில் இதுவரை ஒரு காலத்துக் காசுகூட கிடைக்கவில்லை. (நான் நாளேடுகளில் பார்த்த அளவில்). ஆனால் அழகன்குளத்தில், முத்திரை பதிக்கப் பெற்ற காசு (கி.மு. 5-4-ஆம் நூற்றாண்டு), சங்க காலப் பாண்டியர் காசுகள் (கி.மு. 4-3-ஆம் நூற்றாண்டு), (2), உரோமானியர் காசுகள் (கி.மு. 1-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முடிய) கிடைத்திருக்கின்றன.

7. ஆதிச்சநல்லூரில் வட இந்திய கறுப்பு வழவழப்பான பானை ஓடுகளோ அல்லது மேற்காசிய நாட்டுப் பானை ஓடுகளோ கண்டறியப்படவில்லை. ஆனால், அழகன்குளத்தில் மேற்கூறப்பெற்ற பானை ஓடுகள் கணிசமான அளவில் கிடைத்துள்ளன.

8. ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள் நூற்றுக்கும் மேற்பட்டது கிடைத் திருக்கிறது. அழகன்குளத்தில் தாழிகள் கிடைக்கப் பெறவில்லை.

9. ஆதிச்சநல்லூரில் புதிய கற்காலக் கோடரி அண்மைக்கால அகழாய்விலும், பெண் செப்புத் திருமேனி முந்தைய அகழாய்விலும் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. ஆனால் அழகன்குளத்தில் கற்கோடரியும் கிடைக்கப் பெறவில்லை. செப்புத் திருமேனியும் கிடைக்கப் பெறவில்லை.

10. மேற்கூறப் பெற்றவைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் ஆதிச்சநல்லூரில் நாகரிகம் செப்புக் காலத்திலிருந்து தொடங்கப் பெற்று, புதிய கற்கால, பெருங் கற்காலத் தொடக்கக் காலம் முடிய உள்ள நாகரிகத்தைச் சார்ந்தது என்றும், அழகன்குளம் நாகரிகம் பெருங்கற்காலப் பிற்பகுதியையும் (சங்ககாலம்) வரலாற்றுக் காலத்தின் தொடக்கப் பகுதியையும் சார்ந்த நாகரிகம் என்றும் உறுதியாகக் கூறலாம்.

அடிக்குறிப்புகள்

1. சு.இராசவேலு, கோ. திருமூர்த்தி, தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள், (1995), ப.73.
2. The Hindu, Wednesday, May 26, 2004, The Hindu, Thursday, February 17, 2005.
3. சு.இராசவேலு, கோ.திருமூர்த்தி, மே.கூ.நூல், ப. 74-76.
4. T. S. Subramanian, Front line, July 1, 2005, Chemmozhi, Volume 2, Numbers 2 and 3, January - June 2008.
5. T.S. Subramanian, Op. Cit, p.66.
6. கலாநிதி சி.க. சிற்றம்பலம், பண்டைய தமிழகம் (1991), ப. 81.
7. Dr. S. Gurumurthy, "Recent Archaeological Investigations and Tamil Culture", Bulletin of the Institute of Traditional Cultures, Madras (1976), p.151.

8. Ibid, p.154.

9. K. Rajan, "Kodumanal Excavations - A Report", Gauravam, Recent researches in indology, Editors: K.V. Ramesh, M.D. Sampath, V. Shivanand, L.N. Swamy, (1996), p.81.

10. பி.எல். சாமி, இஆப, தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம் (1984), ப. 71-73.

11. Chemmozhi, Vol.2, January - June 2008, p.29.

12. Natana. Kasinathan, Ancient Industries of Tamilnadu, Bulletin of the Government Museum, Chennai (1997), last plates.

13. T.S. Sridhar, (Editor), Alagankulam, an ancient Roman Port city of Tamilnadu, published by the Department of Archaeology, Government of Tamilnadu, Chennai, (2005), Plate 20, p. 120, 125.

14. Ibid, Plate 19, p. 120, 127.

15. T.S. Subramanian, Front Line, July 1, 2005, p. 70.

16. ஆவணம், இதழ் 19, ஜூலை 2008, எ.சுப்பராயலு, "மண்கல தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புகள்", ப.191.

17. Natana. Kasinathan, Tamils Heritage (2006), p. 120.

18. R. Nagaswamy, Damilica (1970), plate 48a.

19. Natana. Kasinathan, Op. cit, p.122, on the interior base of the pot.

20. Ibid, p. 121.

21. Ibid, p. 121.

22. Chemmozhi, Vol.2, June 2008, p. 29.

23. Natana. Kasinathan, Gauravam, p.90.

24. Chemmozhi, Vol.2, June 2008, p. 29.

25. Natana. Kasinathan, General Editor, Authors, A. Abdul Majeed, D. Tulasiraman, S. Vasanthi, Alagankulam, A-preliminary report, p. 4.

26. T.S. Sridhar, Op. Cit, p. 11.

27. Natana. Kasinathan, Gauravam, p.91.

❋❋❋❋

4

பேயாழ்வார்

பெயர்க்காரணம்

பேராசிரியர் **தி. கோவிந்தன்**

பேயாழ்வார் பிறப்பு

மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்து உதித்து நற்றமிழால் நூல் செய்து நானிலத்தில் நாராயணன் நாமம் பரவச் செய்த முதலாழ்வார் மூவரில் ஒருவர் பேயாழ்வார். 'திருக்கண்டேன்' என்று தொடங்கும் அந்தாதி பாடியவர். முதலாழ்வார் மூவரும் உலக இயற்கைக்கு மாறாக, ஒரு தாயின் வயிற்றில் தோன்றாதவர். திருமாலின் சங்கம், கதை, வாளின் அம்சமாகத் தோன்றிய முதல் ஆழ்வார்களில் நாந்தக வாளின் அம்சமாகத் திருமயிலையில் செவ்வல்லிப் பூவில் பிறந்தவர் பேயாழ்வார். இவரே சிவவாக்கியரைத் திருமழிசைப் பிரானாகத் திருத்திப் பணி கொண்டவர் என்பது முதல் ஆழ்வார்களில் இவர்க்கு ஓர் ஏற்றம்.

இவரது அந்தாதிப் பாடல், இப்புலவர் பெருமகனாரது புலமையையும் பக்தியையும் தெளிவாகக் காட்டும். இவர் அன்னை வயிற்றில் பிறக்கவில்லை என்பன போன்ற செய்திகளைப் புராணமரபு என்றே கொள்ளவேண்டும்.

பெயர்

'பேயாழ்வார்' என்பது இவர்க்கு இயற்பெயரா? காரணப் பெயரா? என்று துணிவு கொள்ள முடியவில்லை. கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகத்தில் களப்பிரர் வருகையை ஒட்டிய காலத்தை இலக்கிய ஆசிரியர் இருண்ட காலம் என்பர். இந்தக் காலத்தில் தமிழகத்தில் உயர்ந்து விளங்கிய 'ஆயர்' தலைவர்கள் திருக்கோவலூரில் கூடி மாயோன் மரபை மக்களிடத்தில் பரப்ப முயன்றனர். அவர்களில் ஒருவரே பேயாழ்வார் என்று கருதலாம்.

தமிழ்மொழியில் 'பேஎ' என்னும் அளபெடைச் சொல்லே அச்சப் பொருள் தரும், 'பேயாழ்வார்' என்பது 'பேஎ' என்ற சொல்லடியாகப் பிறந்ததன்று. மாறாகப் பெரியஆயன் ஆழ்வார் என்ற தொடரே பேயாழ்வார் என்று வழக்குப்பட்டது என்று தெளியலாம்.

பெருமை என்னும் பண்புச்சொல் ஆயன் என்னும் வருமொழியொடு புணரப் பெரியாயன் எனவரும். இது வழக்கில் பேயன் என்றாகும்.

பேய்க்கடுக்காய், பேய்க்கனா, பேய்த்தேர், பேயன்கனி, பேய்க்காற்று, பேய்த்தாழை எனவரும் பல செந்தமிழ்ச் சொற்கள் 'பெரிய' என்பது 'பே' எனத் திரிந்து வழக்குப்பட்டிரப்பதைக் காட்டுவன. இதனால் 'பெரியஆயன்' என்பதே பெயனார், பேய் என்று வழங்கப்பட்டுப் பேயாழ்வார் ஆயிற்று எனலாம்.

ஸ்ரீபராசபட்டமும் பேயாழ்வாரும்

நாலாயிரத்திவ்யப்பிரபந்தத்தனியன்கள் வைஷ்ணவ மரபைப் பெற்றி நிற்பன. ஸ்ரீ பராசரபட்டர் தமது தனியனில்;

'பூதம் ஸரஸ்ச மஹதாஹ்வய என்பது பட்டநாதன் என்று எண்ணுகிறார்'. இத்தொடரில் மஹாதாஹ்வய என்பது 'பெரிய' என்னும் பொருளைத் தரும்' என்ற சொல்லால் பட்டர் பேயாழ்வாரைக் குறிப்பதால், பட்டர் காலத்தில் பேயாழ்வார் என்பதற்குப் பெரிய ஆயனாழ்வார் என்றே பொருள் வழங்கியது எனத் தெளியலாம்.

பேய்ச்சிமுலை

பெரிய ஆய்ச்சி என்பதே பேய்ச்சி என வந்தது. பாலகிருஷ்ணனுக்கு பாலூட்ட வந்த அரக்கிப் பெரிய ஆய்ச்சி வடிவத்தில் வந்தனன். அதனால் குழந்தையை அவனிடம் தந்நதனர். அந்தப் பெரிய ஆய்ச்சியைப் பேய்ச்சி என்று வழங்கினர்.

'பேய்முலை நஞ்சுண்டு' என்னும் பாலைத் தொடர்க்குப் பெரியனவாகிய தனங்களில் தோன்றிய நஞ்சினை உண்டு எனப் பொருள் கொள்ளுதல் நேர் உரை. அன்றிப்பேய் என்பதனை ஆகுபெயராக்கிப் பெரிய ஆய்ச்சி முலை எனவும் பொருள் கொள்ளலாம்.

பேயானேன் என்பவோ

'மனிசரில் துரிசனாய மூர்க்கனேன் வந்துநின்றேன்
மூர்க்கனேன் மூர்க்கனேனே' எனவும்

'பொய்யனேன் பொய்யனேனே' எனவும் தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரம் செய்தாற் போலப் பேயனேன்' என்று ஆழ்வார் வாழ்ந்ததாகக் கொண்டு 'பேயன்' என்பதே பெயர் என்று கொள்வது தமிழ் மரபுக்கு முற்றிலும் முரண் ஆகும்.

தமிழ்நாட்டில் இயற்பெயர்கள் அச்சப் பொருளிலோ அமங்கலப் பொருளிலோ இழிபொருளிலோ பண்டை நாளில் வழக்குப்படவில்லை. ஆதலான், பெரிய ஆயன் என்பதே 'பேயன்' என்றாகிப் பேயாழ்வார் என்று வழக்குப்பட்டது என்று தெளியலாம்.

❋ ❋ ❋ ❋

5

சேதுக்கரை - ஸ்ரீனிவாசப்பெருமாள் கோயில்

சொ. சந்திரவாணன்
காப்பாட்சியர்(சி.நி.)

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டத்தில் சேதுக்கரை எனும் சிற்றூர் அமைந்துள்ளது. கடற்கரைக்கு அருகேயுள்ள இச்சிற்றூர் இராமநாதபுரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 19 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூருக்குச் சென்றுவர நகர பேருந்து வசதியும் உள்ளது.

'சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்' என்று பாடிய பாரதியின் கூற்றுக்கு சான்றாக உள்ள இவ்வூர் திருப்புல்லணை என்று அழைக்கப்பட்டு இன்று மக்கள் பேச்சு வழக்கில் 'திருப்புல்லாணி' என மருவி அழைக்கப்படுகின்ற ஊருக்கு அடுத்து உள்ளது. ஊரின் எல்லையாக தெற்குப்பகுதியில் கடற்கரைக்கு போகும் வழியில் ½ கி.மீ. முன்பாக உள்ளது கல்வெட்டுடன் கூடிய ஸ்ரீனிவாசப்பெருமாள் கோயில். மக்களின் பேச்சு வழக்கில் 'ஸ்ரீனிவாசப்பெருமாள் கோயில்' என்றும் பொதுவாகப் பெருமாள் கோயில் என்றும் அழைக்கப்படுகின்றது.

கிழக்குப் பார்த்து அமைந்தள்ள 'ஸ்ரீனிவாசப்பெருமாள் கோயிலில், கருவறை, இடைநாளிகை, முன்மண்டபம் என்ற முறையான கட்டடக்கலை அமைப்புடன் காணப்படுகின்றது.

கருவறை, அடி முதல் கூரைப்பகுதி வரை மணற்கல்லால் (Stand Stone) அமைக்கப்பட்டுள்ளது. கூரைக்கு மேல் செங்கல் மற்றும் சுதையாலாகிய வட்டவடிவ வேசர விமானம் அழகு செய்கிறது. ஏகதள விமானமாக உள்ள இவ்விமானத்தின்மேல் கலசம் இல்லை.

அதிட்டானப்பகுதி, பீடம், ஜகதி, கண்டம், பட்டி என்ற எளிமையான அமைப்புடன் காணப்படுகின்றது. கருவறைச் சுவர்ப்பகுதியில் கல்வெட்டுகள் ஏதுமில்லை. கருவறையைச் சுற்றிவர திருச்சுற்று காணப்படுகிறது. ஆனால் முற்றிலுமாகச் சிதைந்துள்ளது. மன் மண்டபத்துடன் இணைந்து மகாமண்டபம் காணப்படுகின்றது.

இம்மகாமண்டபத்தின் உள்பகுதியில் வடபுற மேடைப்பகுதியில் உதிரிச் சிற்பங்களாக நின்றநிலையில் கூப்பியகரங்களுடன் கருடன், அமர்ந்த நிலையில் உள்ள நம்மாழ்வார், மத்துவர் சிலைகள் கருங்கற்களாகக் காணப்படுகின்றன. மேலும் வெண்மையான சலவைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக அமைந்த திருமால் சிற்பம் ஒன்று அழகுடன் காட்சியளிக்கிறது. இதனைக் குருவாயூரப்பன் என்று மக்கள் அழைக்கின்றனர்.

இச்சிற்பத்தில் திருமால் நின்ற நிலையில் காணப்படுகின்றார். கிரீட மகுடம் தரித்து நான்கு திருக்கரங்களுடன் காணப்படுகின்ற திருமாலின் மேலிருகரங்களில் வலக்கரம் சங்கும், இடக்கரம் சக்கரமும் தாங்கியுள்ளது. சங்கின் மேலாகவும், சக்கரத்தின் மேலாகவும் ஆளுருவம் காணப்படுகிறது. இதனை முறையே சங்காழ்வார், சக்கரத்தாழ்வார் என்று குறிப்பிடுகின்றனர். கீழிரு கரங்கள் இரண்டும் கதை போன்ற ஆயுதங்களின் மேலாக ஊன்றியது போல காட்டப்பட்டுள்ளது.

கழுத்தணிகள் நிரம்பக் காணப்படுகின்ற திருமாலின் மார்பில் முப்பிரிநூலும், ஸ்ரீவத்ஸமும் அழகு செய்கின்றன. இடையாடை கணுக்கால் வரையிலும், இருகாலிலும் தண்டையும் அணிசெய்கின்றன. இவ்விரு கால்களின் அருகேயும் பக்கத்திற்கு இருவராக நான்கு ஆளுருவங்கள் நின்ற நிலையில் காணப்படுகின்றன. வலப்பக்கத்திலுள்ள இருவரில் ஒருவர் திருமாலின் கதாயுதத்தைத் தன் இடது தோளில் தாங்கி நிற்கின்றார். அவரின் அருகேயுள்ள மற்றொருவர் தன் இடக்கரத்தால் அவ்வாயுதத்தை தொட்டுக் கொண்டு நிற்கின்றார். இடபுறம் உள்ள இருவரில் ஒருவர் சற்றே வளைந்து தம் வலத்தோளில் கதாயுதத்தைத் தாங்கி நிற்க, அவரின் அருகேயுள்ள பெண்ணுருவம் தம் வலக்கரத்தால் அவ்வாயுதத்தை தொட்டுக்கொண்டும் உள்ளார். இவ்வுருவங்கள் அரசன், அரசி, மந்திரி மற்றும் மெய்க்காவலரின் உருங்கள் என்கின்றனர்.


மேலும் திருமால் உருவத்தைச் சுற்றிப் பக்கவாட்டில் பக்கத்திற்கு நான்கு சதுரங்களாக எட்டு சதுரங்கள் காணப்படுகின்றன. அவற்றில் திருமாலின் தசாவதாரச் சிற்பங்கள் ஒரு சில இடம் பெற்றுள்ளன.

மகாமண்டபத்தின் நுழைவாயில் இடப்புறத்தூண் பகுதியில் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. கல்வெட்டின் காலம் கி.பி. 1805-ஆம் ஆண்டாகும். இக்காலகட்டத்தில் இராமநாதபுரம் சேதுபதிகளின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த 'ஸ்ரீ முத்துவிசைய ரகுநாத சேதுபதி' அவர்கள் இப்பெருமாள் கோயிலுக்குச் செய்த திருப்பணி வேலை பற்றியும், அவரின் மகள் 'ஸ்ரீ சேஷம்ம நாச்சியார்' இக்கோயிலுக்குச் செய்த நித்திய பூசைக்கான செயல்கள் பற்றியும் குறிப்பிடுகின்றது அக்கல்வெட்டு. மேலும் 'சேதுக்கரை' என்று தற்போது அழைக்கப்படுகின்ற இவ்வூர் 'சேதுமா சிவபுரம்' என்று அழைக்கப்பட்டதையும் தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டின் கீழாக இராணியின் உருவம் புடைப்புச் சிற்பமாக இறைவனைப் பார்த்து வணங்கிய நிலையில் காட்டப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டு

1. (சாலிவா)
2. கன சகா
3. கூ ம் சூளஉ
4. எற்மேல்ச்
5. செல்லாறி
6. ன்ற ரத்தாட்
7. சி ஞ தைய்
8. மீ உயகூ உ
9. அகஷத்திய
10. தீறத்தில் சே
11. துமா சிவபுர
12. ம் ஸ்ரீனிவா
13. சகசுவாமி
14. சன்னதி தி
15. ருப்பணி வே
16. லை கைங்கிரி
17. யம் செய்த
18. ஸ்ரீ மதும
19. காறாசராச
20. மானியராச
21. ஸ்ரீ முத்து வி
22. சையரெகு
23. னாதச் சேது
24. பதி காத்ததே
25. வரவர்கள்
26. குமாரத்திய
27. ாகிய ராசம
28. ானிய ராச
29. ஸ்ரீ சேஷம்
30. ம நாச்சிய
31. ா ரவர்கள்
32. நித்திய ச
33. தா சே
34. ருவை உ





6

முசிறிப் பானை ஓட்டில் இருப்பது வில்லா, சொல்லா?

பேராசிரியர் இரா. மதிவாணன்
மதிப்புறு இயக்குநர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்கம்

உலக வரலாற்றில் மொழி, பண்பாடு, வரலாறு ஆகிய மூன்றும் பிரிக்க முடியாதவை. ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த இவற்றை மொழியியலார், குமுகாய பண்பாட்டு ஆய்வாளர்கள், மரபு பிறழாத வரலாற்று ஆய்வாளர்கள், தொல்லியல் அறிஞர்கள். கல்வெட்டு ஆய்வாளர்கள் ஒருங்கிணைந்து ஆராய்தல் வேண்டும்.

உண்மை வரலாற்றை மறைப்பதற்காகப் புராணங்கள் எனும் தொன்மைக் கதைகளைப் பரப்பினார்கள். அயலவர் தாக்கம் உண்மைத் தமிழரின் பண்பாட்டு வடிவங்களை உருமாற்றிவிட்டது. மொழித் தூய்மை மட்டும் தமிழில் காக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகளை மீட்டெடுப்பதற்குக் கல்வெட்டுகளும், பானை ஓட்டு எழுத்துகளும் தக்க சான்றாக விளங்குகின்றன.

வீட்டுக்கு ஆவணம் எப்படி அடிப்படையானதோ அப்படி நாட்டுக்கு வரலாறு அணித்தரமான சான்றாக அமைகிறது எனப் பாவணர் அடிக்கடி சொல்வதுண்டு. வரலாற்று இருட்டடிப்புகளை வெளிப்படுத்தவும் கல்வெட்டுகளிலும், பானை ஓட்டிலும் உள்ள செய்திகளைத் தடம் பிறழாமல் படிக்கவும் ஆய்வாளர்கள் முன் வரவேண்டும்.

கல்வெட்டு ஆய்வாளர்களின் கடுஞ்சறுக்கல்களால் உண்மை மறைக்கப்பட்டு குழப்பங்களுக்கு மட்டும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்கள். இவற்றைப் பல இடங்களில் நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அத்தகைய நேர்வுகளில் சேரனின் தலைநகராகிய வஞ்சிமாநகருக்கு அருகில் கடலுள் மறைந்து போன முசிறித் துறைமுகப்பகுதி சார்ந்த பட்டணம் என்னுமிடத்தில் அகழாய்வு நடந்தது. பிளைனி, தாலமி போன்றவர்களால் புகழ்ந்து பாராட்டப்பட்ட முசிறித் துறைமுகம் கடல் கொண்டது. அதன் அருகிலுள்ள சிற்றூர் பட்டணம் எனப்படுகிறது. இது பேரியாற்றின் தென்கரையில் எர்ணாகுளம் (கொச்சி) மாவட்டத்தில் பரவூருக்கு அருகில் உள்ளது. இது கொடுங்களூருக்கு 8 கி.மீ. தொலைவிலும் கொச்சிக்கு 25 கி.மீ. தொலைவிலும் மேற்குக் கடற்கரையிலிருந்த 5 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இங்கு கண்டெடுக்கப்பட்ட பானை ஓட்டுச் சொல் ஒன்றினைக் குறிப்பிடலாம் (செம்மொழி 21-26). (முசிறியைப் பொன்னொடு வந்து

கறியொடு பெயரும் கப்பல்கள் நிறைந்த துறைமுகமாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அகம் 51:15, 149:1 புறம் 343:10 கே.பி. சாசன் (2004) செல்வகுமார் (2005) ஆகியோரும், 2007இல் கேரள அரசின் முசிறித் தொன்மரபு திட்டத்தின் சார்பாகவம் கேரள வரலாற்று ஆராய்ச்சி குழுமத்தின் சார்பாகவும் ஆய்வு மேற்கொண்ட செரியன் முதலியோரும் மேற்கொண்ட பெருமுயற்சியால் அரிய பொருள்கள் அகழாய்வில் வெளிவந்தள்ளன.

பட்டணம் கடற்புற அகழாய்வில் அவர்கள் கண்டெடுத்த பானை ஓடுகளில் சிந்துவெளி எழுத்துகளும் இடம் பெற்றிருப்பதை அவர்கள் ஊன்றிக் கவனிக்கவில்லை. கோழிக்கோட்டில் நடைபெற்ற இந்திய வரலாற்றுக் கழக கருத்தரங்கில் அப்பானை ஓட்டு புகைப்படங்கள் கடைசிக்கு வைக்கப்பட்டிருளந்தன.

ஒரு பானை ஓட்டில் **வஞ்சி** என்னும் சொல் சிந்தவெளி எழுத்தில் எழுதப்பட்டிருப்பதை நான் கண்டேன். இதனைத் தொல்பொருள் ஆய்வாளர்கள் வெறும் வில் அம்பு உருவமாகக் கண்டறிந்தார்கள். அந்தப் பானை ஓட்டுப் புகைப்படத்தின் கீழ் வில் அம்பு (bow and arrow) என எழுதி வைத்திருந்தனர். அவர்களுடைய கருத்தின்படி வில்லம்பு தோற்றம் மட்டும் தான் தெரிய வேண்டும். பிராமி எழுத்தின் இகரக் குறியீடு போன்ற வளைவு ஒன்று சேர்க்கப்பட்டிருப்பது ஏன்? வில்லின் மேல் இது ஏன் வந்தது? வில்லுக்குக் கீழே நீள்வட்டமும் நெடுங்கோடுகளும் ஏன் சேர்ந்தன. இவை வில்லம்பு காட்சிக்கு எவ்வகையிலும் பொருத்தமுடையனவாகவும் இல்லை. அருகில் இணைத்துக் காட்டப்படவேண்டியனவும் இல்லை.



இவை சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் தெளிவான வ, ஞ், சி எனும் மூன்று எழத்துகள் என்பதை நான் நேரில் படித்தறிந்தேன். வஞ்சி மாநகரின் பெயர் சிந்துவெளி எழுத்துகளில் பொறிக்கப்பட்டிருப்பது வரலாற்றுச் சிறப்புடையது. சிந்துவெளி எழுத்து என்பது பழந்தமிழரின் சொந்த மொழி என்பதற்கு இது மாபெரும் சான்றாகிறது.

இதைப் போன்றே இலண்டன் அருங்காட்சியகத்திலிருந்து கண்டறிந்த கோவை சார்ந்த சூலூர் பானை ஓட்டில் உள்ள சிந்துவெளிக் குறியீடுகளை ஐராவதம் மகாதேவன் வெளிப்படுத்தினார். அதனை நான் கந்தன் கிணையன் எனப்படித்துக் காட்டினேன். இத்தகைய உண்மைகளை உலகறிய அறிவிப்பது தொல்லியல் ஆய்வாளர்களின் முதற்கடமையாகும்.

சிந்துவெளி முத்திரைகளில் உள்ள தெளிவான எழுத்துப் பொறிப்புகளாக இது வரை கண்டறியப்பட்டவை 5000 எண்ணிக்கையைத் தாண்டவில்லை. அங்கு முத்திரைகளில் கிடைக்கும் சிந்துவெளி எழுத்துக் குறியீடுகள் தமிழ்நாட்டில் பானை ஓடுகளிலும் பாறை ஓவியங்களிலும் உள்ளன. முறையாக அகழாய்வு செய்தால் தமிழ்நாட்டில் மட்டும் 10,000 பானை ஓடுகளில் சிந்துவெளி எழுத்துக் குறியீடுகளைக் கண்டறிய முடியும். சிந்துவெளி முத்திலைகளைப் போல் இருமடங்கு மும்மடங்கு சான்றுகளைக் கண்டறிய வாய்ப்புள்ளது. அரசும் ஆய்வு நிறுவனங்களும் முயன்றால் முடியும்.

விக்டோரியா மகாராணி காலத்து விளக்குத் தூண்கள்

விக்டோரியா மகாராணி அவர்கள் கி.பி. 1837-ஆம் ஆண்டு பட்டத்திற்கு வந்து ஆங்கில அரசாட்சியின் வரலாற்றில் அதிக நாட்கள் ஆட்சி செய்தவர் என்ற சிறப்புடன் கி.பி. 1907 வரை 70 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவரது ஆட்சியின் பொன்விழா ஆண்டு. அதாவது ஐம்பதாவது ஆட்சியாண்டு கி.பி. 1887-ஆம் ஆண்டாகும். எனவே இதனைக் கொண்டாடும் விதமாக சோளிங்கர் நகரில் வசித்த கனகராஜ் என்பவர் விளக்குத் தூண்களை அமைத்துள்ளார். விளக்குகளையும் விளக்குத்தூண்களையும் அமைத்தச் செய்தியை ஆங்கில மொழியில் குறிப்பிடும் கல்வெட்டில் இந்நற்செயலைச் செய்த கனகராஜ் பெயரை மட்டும் உள்ளூரில் உள்ள ஆங்கிலம் அறியாத தமிழ் மட்டுமே படிக்கத் தெரிந்த பொது மக்கள் தெரிந்துகொள்ளும்படி தமிழில் வெட்டப்பட்டுள்ளது. இச்செய்தியை தெரிவிக்கும் கல்வெட்டு வாசகம்:

1. THE
2. VICTORIA
3. LAMP
4. FIXED
5. 11 FEB 1887
6. BY
7. SHOLINGAR
8. **கனகராஜ்**

இந்நான்கு கருங்கல்விளக்குத் தூண்களும் 6½ அடி உயரத்தில் ஒரே சீராக பக்கத்திற்கு இரண்டு வீதம் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் நுனிப்பகுதியில் எண்ணையை ஊற்றி விளக்குகள் ஏற்றவும், ஏற்றப்பட்ட விளக்குகள் காற்றின் வேகத்தால் அணையாமல் இருக்கும் பொருட்டு கண்ணாடிகள் பொருத்த இரும்புச் சட்டங்களுடன் கூடிய அமைப்புடன் இவை காணப்படுகின்றன.

மா. கலைவாணன்
காப்பாட்சியர், ஆர்க்காடு

7

VEEMEESWARER TEMPLE AT SERAPPANACHERI - A STUDY

Dr. Rukmani Vathanam
Reader and Head Department of History
Meenakshi College for Women, Chennai-24

In the ancient geography of Tamilagam, the village Serappanancheri and its adjoining areas were inculuded in the Velimanaallur nadu under Urkattukkottam of Jeyamkonda mandalam. Now it is a village situated in the Sriperumbudur taluk of Kanchipuram District at a distance of approximately 45 kms from Chennai and 5 kms. from Padappai on the route from Tambaram to Kanchipuram (via Wallajabad).

Serappanancheri is the present name of the village where Veemeeswarer temple is situated. The other names of this village are Peruvanjur, Peruvanjurana Rajakesari nallore and Peruvanjurana Rajendra nallore and Rajendra Kesari nallore. Veemeeswarer temple is one of the oldest temples of Late Chola period. There are seven inscriptions found in this temple. Six belong to the Cholas and one belongs to the Telugu Cholas. Among the Chola inscriptions three belong to Kulottunga III and another three belong to Rajaraja III. The Telugu Chola inscription belongs to the ruler Vijaya Kanda Gopalan. The inscriptions of this temple range in date from 1180 A.D. to 1275 A.D. or 12th to 13th century A.D.

The seven inscriptions provide some informations on socio-enonomics and religious conditions of this village during the later Chola and the Telugu Chola period. Inscriptions throw light about the existence of some terms such as Sivabrahmanas, Pillai, Pattan,

Koothan, Barathwasi, etc. The epigraphic records refer the coin names as "Kasu", "Palankasu" and "Madai" and land measurement term as "Kani", Further the donations to the temple for lighting the lamp was also mentioned in six inscriptions. Among the six, two inscriptions mentioned about the donations made for the perpetual lamp in this temple by the ladies of this area.

ARCHITECTURE

From the epigraphical evidences it is identified that this Veemeeswarer temple is one of the Later Chola temples. Now it is in a dilapilated condition. The Garbagraha is facing the east with the temple entrance on the southern side of the Front mandapa. The inscriptions are seen on the sourthern outer wall of the Garbagraha, Ardhamandapa and the Front mandapa. In front of the Garbagraha there are Ardhamandapa, Mukamandapa and Front mandapa are located.

GARBAGRAHA

The Garbagraha is facing east, is square in shape. Linga inside has a round peedam. The inner walls of the Garbagraha are plain. There is an entrance on the eastern side and it has no doors. The Garbagraha is in a Gajaprashta type. So at the back side of the Garbagraha basement is in half circle. It raises vertically upto the level of the cornice. There is no vimana at present only the iron sheets covers the Garbagraham. Now it is in a dilaplated stage. But it might be Gajaprashta vimana or ordinary other Chola temple vimana. The Garbagraha walls consist of three empty Koshtams on the south west and north. Usually all Later Chola temples might be having Dakshnamoorthy, Linghothbhavar and Brahma respectively in all the three Koshtams. Now all the three Koshtams are vacant in this temple. The basement has adhisthana and upapitha, they are uniformly found on the three sides of Garbagraha and Ardhamandapa. The adisthana contains two sets of vedika, pattika, galapada, gantha, plain kumudha and padma. The upapitha has only pattika and padma with some rectangular carved projections.

The southern and the northern Garbagraha walls are having four pilasters and one kumbapanchara design on either side. Further each devakoshta has small pillasters on either side. All pilasters are having the architectural features of octagonal shafts square palagai, padma, Kumbha, tadi vedika and oma. The Koshta is decorated with beautiful sala type capital. The kumbapanchara pilasters with sala type capital are remarkable one.

ARDHAMANDAPA

In front of the Garbagraha there is a projecting vestibule called Ardhamandapa. At the entrance between the Garbagraha and the Ardhamandapa there are kumbapanchara pilasters one on each side of the entrance are found. The entrance has no doors. The Ardhamandapa has a flat roof. The Ardhamandapa outer wall has three pilasters and one devakoshtas on either side. The style of the koshtas and the pilasters of Ardhamandapa are similar to that of the Garbagrahas.

MUKHAMANDAPA

The Ardhamandapa preceded to a narrow Mukhamandapa with four pilasters on either side of the entrance from Ardhamandapa to Mukhamandapa. Now at the entrance they provide iron gates for safety purpose. Among these pilasters two has octagonal shafts with palagai and saladecoration of Later Chola architecture are found. The other pillars are with octagonal shafts and capitals with square base the other sides of the walls are in a dilaplated condition. It has no tala, no entrance and all are ruined. The width of the Mukhamandapa is slightly narrow than the Ardhamandapa. The Mukhamandapa basement is similar to that of Garbagraha but kumudham is octagonal in shape.

FRONT MANDAPA

It is situated in front of the Mukhamandapa. The width of the Front mandapa is more than the Mukhamandapa on either side. This mandapa has no walls, pillars and tala, all are ruined. It has an entrance on the southern side was proved by the flight of three steps opened on a rectangular platform (it might be a portico basement). This platform with a flight of four steps on either sides (east and west). The steps are decorated with elephant heads on either side which give pleasing look. At the basement of the platform there are some floweral design, Budhaganas, padmam and Makara Freeze. This mandapa might have been constructed by Vijaya Ganda Gopala whose inscription is noticed (1275 A.D.). For some times this ruler was under the control of the Later Pandyas. Which was confirmed by the existence of Makara Freeze in the mandapa.

At present there are two theerthams are found near the temple, at South East corner and at North West corner. There is a temple well on the northern prakara.

According to oral tradition that there was a separate Amman shrine on the northern prakara but now there is no trace of it.

On the eastern side of the front mandapa there are two old and beautiful nandhis kept on raised platforms. From this we can assure that this temple might have either one or two huge prakaras with remarkable Amman shrine. On the eastern side of the nandhis there is a Surya sculpture. It might have been inside the prakara some years back and it was one of the Parivaradevatas of this temple. The other Parivaradevatas are not there. The prakara walls of the temple was also not there, granites of the broken wall are scattered all around.

This temple might have been constructed by Kulottunga III of Later Chola ruler. Once it was a famous temple and this place played a vital role in the history of this region. The important historical places such as Manimangalam, Somangalam, Kanchipuram and Sriperumpudur are nearer to this place.

References

1. Gazetteers of India. Tamilnadu State, Kanchipuram & Thiuvallur District. Vol. I & II. Editor. M. Gopalan.
2. Inscriptions of Kanchipuram Dist., TNSDA.
3. Later Chola Temples By S.R. Balasubramanyam.
4. Cholar kalaipani By S.R.Balasubramanyam.
5. Census report.
6. Nilakanda Sastri K.A. The Cholas, Madras, 1984.
7. Mahalingam T.V. Kanchipuram in Early South Indian History, Madras, 1968.

Note:-

This Temple is in a dilaplated condition. This can be taken up as a monument for conservation and protection.

8

பாவாலியில் சில வரலாற்றுச் சுவடுகள்

சொ. சாந்தலிங்கம்
தொல்லியல் அலுவலர்

விருதுநகர் மாவட்டம் விருதுநகர் வட்டத்தில் விருதுநகரிலிருந்து செங்குன்றாபுரம் செல்லும் வழியில் அமைந்துள்ள சிற்றூர் பாவாலி. மதுரை நாயக்கர்கள் காலத்தில் பாண்டிய மண்டலம் 72 பாளையப்பட்டுகளாகப் பிரிக்கப்பட்டபோது பாவாலியும் ஒரு பாளையப்பட்டாக அமைந்தது. இதனைத் தெலுங்கு பேசும் கம்பளத்து நாயக்கர் என்னும் ஒரு பிரிவினர் தலைமைபெற்று நிருவகித்து வந்தனர். ஆங்கிலேயர்கள் காலத்தில் இந்தப்பாளையமும் பிற நாயக்கர்களின் பாளையங்களைப் போலவே அடக்கு முறைக்கு ஆட்பட்டது.

இவ்வூரில் இருந்த பாளையக்காரரை எச்சரிக்கும் விதத்தில் மோகர் பானர்மேன் என்னும் ஆங்கிலேய இராணுவ அதிகாரியால் ஓர் எச்சரிக்கைத் தகவல் செப்புப்பட்டயம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. அதனை இவ்வூரில் அமைந்திருந்த சிறுஅரண்மனையின் முன்பாக ஒரு தூணில் பொறுத்தி மக்கள் பார்வைக்கு வைத்துள்ளனர். இது வரலாற்று ஆய்வாளர்கள் பலராலும் ஏற்கனவே அறியப்பட்ட தகவலே. இது போன்ற செப்புப்பட்டயம் எட்டயபுரம், பெரிய சொல்லப்பட்டி, கோல்வார்பட்டி ஆகிய பாளையங்களிலும் வைக்கப்பட்டு இன்றும் மக்கள் பார்வையில் உள்ளது. இது பலரும் அறிந்த செய்தியே.

அண்மையில் (12-2-2009) தொல்லியல் துறையின் முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப,** அவர்களும் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் **திரு.ரகுபதி, இஆப,** அவர்களும் தொல்லியல் அலுவலர் முனைவர் சொ.சாந்தலிங்கமும் இப்பட்டயத்தினைப் பார்வையிட்டனர். இரவு சுமார் 7.30 மணியளவில் சீருந்துகளின் வெளிச்சத்தில் பட்டயம் பொறுத்தப்பட்டிருந்த கல் தூணைப் பார்வையிட்ட போது அக்கல்லில் வீரன் ஒருவனின் உருவம் கோட்டுருவமாகச் செதுக்கப்பட்டிருந்ததைக் கண்டறிந்தனர். இது ஆய்வாளர்கள் யாவரும் இதுவரைக் காணாதக் காட்சியாகும்.

நல்ல உடல் வலிமை மிக்க வீரன் ஒருவன் வலக்கையில் வாளும், இடக்கையில் கேடயமும் பிடித்திருக்க இரண்டு கால்களையும் முன், பின்னாக வைத்து வீரநடையபோடும்

பாவனையில் இவ்வுருவம் காணப்படுகிறது. உருவத்தின் தலை சற்றே தொங்கியது போலவும் தோற்றமளிக்கிறது. இவ்வுருவத்திற்கும் செப்பேட்டில் கூறப்பட்டிருக்கும் எச்சரிக்கைக்கும் ஒரு தொடர்பு இருப்பது போலவும் தோன்றுகிறது.

இச்செப்பேடு 21-11-1799 அன்று மேஜர் பானர்மேனால் வெளியிடப்பட்டுள்ளது. 16-11-1799 அன்று வீரபாண்டியக் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பிறகு அச்செய்தியைத் தெரிவித்து பிறபாளையக்காரர்களை எச்சரிக்கிறது இப்பட்டயம். ஆங்கியலேயர் ஆட்சிக்குக் கட்டுப்பட்ட பாளையக்காரர்கள் எவரும் அரசுக்கு எதிராகச் செயப்பட்டாலோ, படை திரட்டினாலோ, ஆயதங்கள் வைத்திருந்தாலோ, அரசுக்கு எதிராகக் கலகம் செய்தாலோ கட்டபொம்மனுக்கு ஏற்பட்ட முடிவுதான் ஏற்படும் என எச்சரிக்கிறது செப்பேடு, அதே செய்தியை தூக்கிலிடப்பட்ட வீரன் உருவத்தையும் கல்லில் பொறித்துக் காட்டியுள்ளதாகவே இத்தூண் நமக்குத் தோற்றமளிக்கிறது. ஆனால் பகல் நேரத்தில் பார்க்கும் போது உருவம் சரியாகப் புலப்படுவதில்லை. இரவு நேரவெளிச்சத்தில் உருவம் நன்கு காணப்படுகிறது. இப்பட்டயத்தைப் பொறுத்த அளவில் இது ஒரு புதிய செய்தியாகவே கருதலாம்.

பாளையப்பட்டாக இவ்வூர் பெயர் பெறுவதற்கு முன்பாகவே. கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டில் பிற்பாண்டியர் காலத்தில் இது ஒரு முக்கிய சைவத்தலமாகவும், வணிக மையமாகவும் திகழ்ந்திருக்கிறது. இவ்வூரின் கண்மாய் அருகில் உள்ள குடிநீர்க் கிணறு ஒன்றில் வைத்துக்கட்டப்பட்டுள்ள கல்வெட்டுப் பொறித்த கல் ஒன்றின் மூலம் இச்செய்தி நமக்குத் தெரியவருகிறது. இக்கிணறு 'பாண்டியன் கிணறு' என இன்று இவ்வூர் மக்களால் அழைக்கப்படுகிறது. ஆனால் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குள் இக்கிணறு தோண்டப்பட்டு கல்லால் சுற்றுச்சுவாகள் கட்டப்பட்டிருக்கலாம். இவ்வூரில் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டளவில் பிற்பாண்டியர்களால் கட்டப்பட்ட ஓர் சிவன் கோயில் 'திருவாலீசுவரம்' என்னும் பெயரில் இருந்துள்ளது. அக்கோயில் எக்காரணத்தாலோ முற்றிலும் அழிந்து போயிருக்க வேண்டும். அங்கிருந்த துண்டுக்கற்களைக் கொண்டுவந்து இக்கிணற்றின் சுற்றுச் சுவர்கள் பிற்காலத்தில் கட்டப்பட்டுள்ளன. இங்கு இரண்டு கற்களில் பிற்பாண்டியர்காலக் கல்வெட்டுகள் உள்ளன. இரண்டும் துண்டுக் கல்வெட்டுகளே. ஒன்றின் பாடம் வருமாறு:

1. . . . சடையவர்மரான குலசேகர
2. தேவற்கு யாண்டு மூன்றாவதினெதிரா . .
3. மாண்டு செங்குடி நாட்டுப் பாவாலியில் . .
4. திருவாலீஸ்வரமுடையார் கோயில் சிவா . . .
5. ராமணிரோம் இவ்வூர் அஞ்ஞூற்றுவன்வி
6. யாபாரி கருப்பூருடையான் தேவன் திரு . . .

பிற்பாண்டியர் வரலாற்றில் சடையவர்மன் குலசேகரன் என்ற பெயரில் இரண்டு பாண்டிய மன்னாகள் ஆண்டுள்ளனர். முதலாமவன் கி.பி. 1162-1177 வரையிலும் இரண்டாமன் கி.பி. 1190-1216 வரையிலும் ஆட்சி செய்துள்ளனர். இக்கல்வெட்டை இவர்களில்

ஒருவர் காலதத்தாகக் கருதலாம். எனவே கி.பி.12-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியைச் சேர்ந்தது இக்கல்வெட்டு.

இக்கல்வெட்டின் மூலம் இவ்வூரின் பழம் பெயரே பாவாலி தான் என்பதும், இது செங்குடி நாடு என்னும் உட்பிரிவில் அடங்கியிருந்தது என்றும் தெரியவருகிறது. திருவாலீசுவரம் என்னும் பெயரில் ஒரு சிவன் கோயில் இருந்து அது சிவபிராமணர்களால் பராமரிக்கப்பட்டுள்ளது. இவ்வூரில் செயல்பட்டு வந்த ஐநூற்றுவர் என்னும் வணிகக் குழுவைச் சேர்ந்த கருப்பூருடையான் தேவன் என்பவன் இக்கோயிலுக்கு ஏதோ கொடை அளித்திருக்கலாம். கல்வெட்டு முழுமையாகக் கிடைக்காமையால் அனைத்துச் செய்திகளையும் அறியமுடியவில்லை.

மற்றொரு துண்டுக்கல்வெட்டு இரண்டு வரிகளையே கொண்டுள்ளது. மிகவும் தெளிவற்ற நிலையில் உள்ளது. இடிந்து போன திருவாலீசுவரம் சிவன் கோயிலின் கற்களைக் கொண்டு நாயக்கர்கள் காலத்தில் சுப்பிரமணியர் கோயிலி கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் உள்ள நந்தியின் சிலை கி.பி. 12-13-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இங்குள்ள பலிபீடத்திலும் இதே காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று உள்ளது.

பலிபீடக் கல்வெட்டு

பலீபீடத்தில் உள்ள கல்வெட்டும் தொடக்கமும் முடிவும் இன்றி உள்ளது. ஏற்கனவே சிவன் கோயிலில் இருந்த கல்வெட்டுக் கற்களைக் கொண்டு இப்பலிபீடம் கட்டப்பட்டுள்ளது. பள்ளியறை ஆளுடையார்க்கு செங்குடி ஆசாரியன் கொடுதத் ஒரு நிலக் கொடை பற்றிய செய்தியை இக்கல்வெட்டு தருகிறது. மேலும் ஆறு துண்டுக் கல்வெட்டுகள் சுப்பிரமணியர் கோயிலின் சுவர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வைத்துக் கட்டப்பட்டுள்ளன. இவற்றின் எழுத்தமைதி கொண்டு இவை கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளே என்று உறுதியாகக் கூறலாம்.

மேலும் இக்கோயிலில் தற்போது வைக்கப்பட்டுள்ள இரண்டு நந்திகளின் கற்சிலைகளும், விநாயகர் சிற்பம் ஒன்றும் பிற்பாண்டியர் கலைச் சான்றுகளாகத் திகழ்கின்றன. இவற்றின் மூலம் கி.பி.12-13-ஆம் நூற்றாண்டுகளில் இவ்வூர் செழித்து விளங்கியது என்பது பெறப்படுகிறது.

சதிக்கல்

ஊரின் நுழைவாயிலின் நான்கு தூண்களுடன் கூடிய ஒரு சிறு மண்டபம் சாலையின் ஓரத்தில் காணப்படுகிறது. இம்மண்டபத்தின் நடுவில் கணவனும், மனைவியுமாக இரண்டு உருவங்கள் நின்றநிலையில் வைக்கப்பட்டுள்ளன. இரண்டு உருவங்களையும் சுற்றித் தலைக்கு மேலாகத் திருவாசிகை ஒன்றும் செதுக்கப்பட்டுள்ளது. உடன்கட்டை ஏறிய தம்பதிகளின் நினைவாக வைக்கப்பட்டுதாக இச்சிற்பத்தைக் கருதலாம். வலப்பக்கம் பெண்ணும், இடப்பக்கம் ஆணும் நிற்கின்றனர்.

ஆண் உருவத்தின் வலது கரத்தில் வாளும் இடது கரத்தில் கேடயமும் காணப்படுகிறது. சற்றே வளைந்த தலைப்பாகையும், எளிமையான அணிகலன்களும்,பாதம் வரை ஆடையும் கொண்டுள்ளது இவ்வுருவம். பெண் உருவத்தின் வலது கையில் உடைந்த நிலையில் உள்ள ஒரு அமைப்பு பூமாலை போலத் தோன்றுகிறது. இடக்கையில் முகம் பார்க்கும் கண்ணாடியைப் பிடித்துள்ளாள். தலை அலங்காரம் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டு நாயக்கர் சிற்பங்களில் உள்ளது போன்று சற்றே கொண்டை இடப்புறம் சரிந்தள்ளது. கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டின் நாயக்கர் கலைப்பாணியில் அமைந்துள்ள இச்சிற்பங்கள் அன்றைய பாளையக்காரரின் சதிக்கல் சிற்பம் எனக் கருத வாய்ப்புள்ளது. உடன்கட்டை ஏறிய அவ்விருவரின் நினைவாக இச்சிற்பங்கள் அமைக்கப்பட்டு ஒரு சிறு மண்டபத்தில் இடம் பெற்றுள்ளன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் மூலமாக இவ்வூரின் வரலாறு கி.பி. 12-ஆம் நூற்றாண்டுவரை முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்ட வரலாற்றில் பாவாலியின் இடம் குறிப்பிடத்தக்கதாய் மாறியுள்ளது.

****

9

ஆனந்தூரில் சித்திரமேழிவிடங்கர் கல்வெட்டு

முனைவர் தி. சுப்பரமணியன்
தொல்லியல் அலுவலர்,

கிருட்டிணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம் ஆனந்தூரில் உள்ள தான்தோன்றீஸ்வரமுடையார் கோயில் புதுப்பித்துக் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. இப்பணியின்போது, இக்கோயில் குளத்தில் கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இக்கல்வெட்டு தனி கல்லில் வெட்டப்பட்டுள்ளது.

கல்வெட்டு இரண்டு பகுதிகளாகக் காணப்படுகின்றது. மேற்பகுதியில் புடைப்புச் சிற்பங்களும் கீழ்ப்பகுதியில் கல்வெட்டும் உள்ளன. புடைப்புச் சிற்பங்களின் மையப் பகுதியில் தாய்தெய்வம் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையிலும் இதன் அருகில் சின்னங்களும் காணப்படுகின்றன. தாய்த்தெய்வம் கரண்டமகுடத்துடனும் இரண்டு கரங்களில் தாமரை மலர்களை ஏந்திய நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. காதுகளில் பத்தர குண்டலங்கம் உள்ளன. சூலம், குத்து விளக்குகள், ஏர்க்கலப்பை, மரக்கால் தண்டு மற்றும் சில உருவங்கள் புடைப்புச் சிற்பமாக உள்ளன. இவைகளுடன் சூரியன், சந்திரனும் காட்டப்பட்டுள்ளன.

கல்வெட்டின் வாசகம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கொலொத்துங்க சொழ தெவர்க்கு
2. யாண்டு ஆனந்தூரில் உடையார்
3. திருத்தாந்தோன்றிசீரமுடையார் சித்
4. திரமேழி விடங்கருக்கு ஆதூர் பற்று ந
5. ாட்டொ(ம்) எம்மிலிசைந்ஞ்சு வச்சு(க்)
6. குடுத்த படியாவது சித்திரை திரு ந
7. ாள் (யிந்) நான் கண்டு யிதுக்கு வளர்முன்ப(ண)
8. னம் ஊரால் முக்கண்டக அரிசியும்
9. ஊரார் முக்குளிக எண்ணையும் ஊரால்
10. முப்பது பந்த விளக்கும் இதுக்கு வில
11. க்கு சொல்லுவாருண்டாகில் கங்கரையில் குரால் பசுவை
12. கொன்ற பாவம் கொள்வான்.

சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கனின் 15-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1193) இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. ஆனந்தூரில் உள்ள தான்தோன்றீஸ்வரமுடையார் சித்திரமேழி விடங்கருக்கு ஆதூர் பற்று நாட்டவர்கள் கொடுத்த தானம் பற்றி இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இக்கோயிலில் சித்திரைத் திருநாளில் விழாவெடுக்க மூன்று கண்டக அரிசியும் முக்குளிகைக்கு எண்ணையும், முப்பது பந்த விளக்கும் தானம் கொடுத்த செய்தி இக்கல்வெட்டில் காணப்படுகின்றது.

தகடூர்ப் பகுதியிலுள்ள இயற்கையமைப்பின் அடிப்படையில் இப்பகுதியில் கால்நடை வளர்ப்புத் தொழில் முக்கியமான தொழில் என்பதை கல்வெட்டுகள் கூறுகின்றன. சோழர்கள் தகடூர் பகுதியைக் கைப்பற்றிய பின்னர் விவசாயம் வளர்ச்சியடைந்தது. மேலும் மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தில் இப்பகுதியில் வணிகமும் மற்ற தொழில்களும் வளர்ச்சியடைந்துள்ளன என்பதை பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. வெள்ளிசந்தை, மல்லசமுத்திரம் பாராந்தூர், ஆனந்தூர் போன்ற ஊர்களில் கிடைக்கின்ற கல்வெட்டுகளில் சித்திரமேழி பெரியநாட்டார்களைப் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன. சித்திரமேழி பெரியநாட்டார் என்பவர்கள் உழவுத்தொழிலுக்கு உதவுகின்ற ஏரை வழிபடுகின்றவர்கள். இவர்களை பூமிபுத்திரர்கள் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர்களுக்கென்று தனிமெய்க்கீர்த்திகளும் உள்ளன.

ஆனந்தூரில் உள்ள இக்கோயிலில் மூன்றாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. கல்வெட்டில் இக்கோயில் தான்தோன்றீஸ்வரமுடையார் என்று வருகின்றது. ஆனால் மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டில் "தான்தோன்றீஸ்வரமுடையார் சித்திரமேழி விடங்கர்" என்று வருகின்றது. மேலும் இக்கோயிலுக்கு முக்கண்டக அரிசி கொடுத்ததைப் பற்றிய குறிப்பும் உள்ளது. 'கண்டகம்' என்பது தகடூர்ப் பகுதியில் காணப்படும் அளவு முறைகளில் ஒன்று. தானியங்களை அளக்க இந்த முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. கண்டகம் என்பது தற்போதைய அளவில் உள்ள நான்கு மூட்டைகளை இணைத்து சொல்வதற்கு இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. முக்கண்டகம் என்பது 12 மூட்டை அரிசி கொடுத்த செய்தியைக் கூறுகின்றது. மேலும் பல கல்வெட்டுகளில் 'கண்டக விளை நிலம்' என்றும் பயன்படுகின்றது.

இக்கல்வெட்டில் "முப்பது பந்த விளக்கு" என்ற விளக்கும் குறிப்பிடப்படுகின்றது. இன்றும் தகடூர்ப் பகுதியில் பந்தவிளக்கு கோயில்களிலும், திருவிழாக் காலங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பந்தவிளக்கென்பது ┼ வடிவத்தில் இரும்பு கம்பியை செய்து அதன் மேல் துணியைச் சுற்றி உருண்டை வடிவில் செய்து அதன் மேல் எண்ணையை ஊற்றி விளக்கெரிப்பார்கள். இவ்வாறு செய்வதால் விளக்கு அதிக வெளிச்சத்தைத் தரும். இதே கோயிலில் நந்தாவிளக்கெரிக்க தானம் கொடுக்கப்பட்ட கல்வெட்டும் உள்ளது. பெரும்பாலும் பந்தவிளக்கென்பது கோயிலுக்கு வெளியில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

✱✱✱✱

10

மதராஸ் பெயர் காரணம்

நா. முரளிநாயக்கர்

மதராஸ் பட்டினம் என்றும் சென்னைப்ப நாயக்கன் பட்டினம் என்றும் அழைக்கப்பெற்ற "சென்னை" உலகத்தில் உள்ள பெருநகரங்களில் ஒரு உன்னதமான இடத்தைப் பிடித்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. சென்னைப் பட்டினத்தின் முந்தையப் பெயர் "மதராஸ்" என்று அழைக்கப்பெற்றது. அது ஒரு மீனவரின் பெயரால் அமைந்தது என்றும் மற்றும் அது ஒரு இஸ்லாமியரின் பெயரால் அமைந்தது என்றும் பல ஆதாரமற்ற கதைகள் இன்று வரை வழங்கப்பெற்று வருகின்றன. இவையாவையும் வெறும் கதைகளே என்று மெய்ப்பிக்கும் விதமாக மிக முக்கிய கல்வெட்டுச் சான்று ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இக்கல்வெட்டு விஜயநகர அரசர் கம்பண உடையார் காலத்தியது[1] கிருஷ்ணகிரியில் உள்ள பெண்ணேஸ்வர மடத்தில் இடம் பெற்றுள்ள இக்கல்லெட்டு கி.பி. 1369-ஆம் ஆண்டைச் சார்ந்தது. கம்பண்ண உடையாரின் தானைத் தலைவனான சோமப்ப தெண்ணாயக்கர் மகன் கூளிமாராயர் பெற்ற வெற்றிகளைத் தொகுத்துச் செல்லும் இக்கல்வெட்டில் அவன் கைக்கொண்ட (வெற்றிக் கொண்ட) பட்டினங்களைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. அவை:-

> "புதுப்பட்டணம் மாதரசன்பட்டணம் சந்திக்குவரிய . . . பட்ட
> ணம் நீலங்கரையன் பட்டணம் கோவளம் மற்றுள்ள பல
> பட்டணங்களும் கரையும் துறையும் உட்படக் கொண்டு"

இக்கல்வெட்டின் மூலம் தெரியவரும் பட்டிணங்கள்:-

1. "புதுப்பட்டணம்" என்பது இன்றுள்ள சதரங்கப்பட்டினம் (கல்பாக்கம்)
2. "மதராசன் பட்டணம்" என்பது மதராஸ்பட்டினம் என்று பெயர் மறுவி வழங்கப்பெற்று வந்துள்ளது.
3. "சத்திக்குவரிய . . . பட்டணம்" பற்றி தெரியவில்லை.
4. "நிலங்கரையன் பட்டணம்" என்பது இன்றுள்ள நீலாங்கரையாகும். பிற்காலச் சோழர் மற்றும் பாண்டியர் ஆட்சிக் காலங்களில் தொண்டை மண்டலத்தின் ஒரு

பகுதியை ஆட்சிச் செய்த நீலகங்கரையார் என்ற பள்ளிகுல மன்னர்கள்[2] பெயரால் அமைந்த பட்டினமாகும்.

5. “கோவளம்” என்பது பெயர் மாறாமல் கோவளம் என்றே இன்றும் வழங்கப் பெறுகிறது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டின் மூலம் “மதராஸ்” (Madras) என்பதன் பெயர் காரணம் தெரிய வந்துள்ளது. அது “மாதராசன்” என்ற மன்னன் பெயரால் வழங்கப் பெற்றிருக்கிறது. இந்த “மதராசன்” யார் என்பது வரும் காலங்களில் ஆய்வுகள் மூலம் தெரியவரும். “சென்னப்ப நாயக்கர் பட்டினம்”[3] என்ற பெயர் ஏற்படுவதற்கு முன்னரே “மதராசன் பட்டினம்” என்ற பெயர் வழங்கப்பெற்று வந்தள்ளது. (கி.பி. 14-ஆம் நூற்றாண்டு முதல்) அதுவே பெயர் மருவி பிற்காலங்களில் “மதராஸ்” என்று ஆங்கிலேயாகளால் வழங்கப் பெற்றிருக்க வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. “கிருஷ்ணகிரி மாவட்டக் கல்வெட்டுகள் (2007),” எண்-77B/1973, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு.

2. S.I.I. vol. III Part I & II, No. 36, Page-82;,

   A.R.E. No. 159 of 1918; A.R.E. Nos. 236,249,250 of 1936-37;,

   தொல்லியல் அறிஞர் நடன.காசிநாதன், வன்னியர், செப்பேடு பக்கங்கள் - 223, 258, 229

   இடங்கை வலங்கையர் வரலாறு, தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் வரிசை எண்-76, இடங்கை வலங்கைப் புராணம், D-2793, பக்கம்-11.

3. “The King Chennappa Nayaka belonged to Damal village near Kanchipuram and used Damarla as their family name (S.I.I. vol.XVII No.671). The Damal village dominant Community is Nayakars (or Vanniya) made up the army of the Vijayanagara rulers-from foot soldiers to Governors and rulers. It was this community that took up the sword to fight and protect Kanchipuram”. (Varahishwarar temple, by Nanditha Krishna, The C.P. Ramaswami Aiyar foundation, Chennai)

   S.I.I. Vol. XVII No. 671 states the following:-

“தாமல் வெங்கடப்ப நாயக்கர் பெரனான [ரா] யச சென்னப்ப
குமாரன் வெங்கட்டப்ப நாயக்கர்”

****

சண்டேசரின் சிற்பத் தொகுதி

பக்தசனேஸ்வரர் கோயில் -திருநாவலூர்

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் திருநாவலூர் என்ற ஊர் அமைந்துள்ளது. விழுப்புரத்திலிருந்தும், பண்ருட்டிலிரந்தும் இவ்வூருக்குச் செல்ல பேருந்து வசதி உண்டு. பக்த சனேஸ்வரர் கோவில் திருத்தொண்டர்களான 63 நாயன்மர்களைக் குறிக்கும் வகையில் திருத்தொண்டிஸ்வரம் என கல்வெட்டு குறிக்கிறது.

கதையின் சிற்பத் தொகுதி

இக்கோயிலில் உள் மண்டபத்தின் வடக்கு வெளிப்புறச் சுவற்றில் சுதையின் சிற்பத் தொகுதி காணப்படுகிறது. இவற்றில் சண்டி, மாட்டின் பால் கறப்பது, லிங்கத்திற்கு பால் அபிசேடகம் செய்வது, சண்டியின் தந்தை எச்சத்தத்தன் மரத்தின் பின் இருந்து கவனித்து, பால் குடங்களை காலால் உதைத்தல்; சண்டி தன்மழுவால் தந்தையின் காலை வெட்டுதல், இறைவியும், இறைவனும் காட்சி அளித்தல் போன்ற சிற்பங்கள் ஓர் முழுமையான புராண கதை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. இது படிப்பறியா பாமர மக்களும் உணரும் வகையாக உள்ளது எனில் மிகையாகாது.

இத்தொகுப்புச் சிற்பம் கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.



செய்தி : **சொ. கோவிந்தராம்**
வரலாற்றுக்கு முந்தைய அகழாய்வாளர்

11

கண்டராதித்த சோழன் கண்மாய்க் கல்வெட்டு


நா.கணேசன்

காப்பாட்சியர், கரூர்

கரூர் மாவட்டத்தின் தென் கிழக்கு எல்லையில் அமைந்துள்ளது வடசேரி கிராமம் திருச்சி - தோகைமலை சாலையில் திருச்சியிலிருந்து 20 கி.மீ. தொலைவில் தெற்கே 2 கி.மீ. சென்றால் இவ்வூரை அடையலாம். திருச்சி மணப்பாறை சாலையில் திருச்சியிலிருந்து 20 கி.மீ. தொலைவில் 2 கி.மீ. வடக்கே வடசேரி உள்ளது. தொல்லியல் துறையின் முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் முனைவர் ***தி.ஸ்ரீ.ஸ்ரீதர்*** இ.ஆ.ப, வழிகாட்டுதலின்படி கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின்கீழ் கரூர் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட பொழுது வடசேரி கண்மாய்க் கரையில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு புதிதாகக் கண்டறியப்பட்டது.

வடசேரி கிராமத்தின் தென்புறம் நத்த மேட்டிற்கருகில் சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் இக்கண்மாய் அமைந்தள்ளது. திருச்சி - மணப்பாறை சாலையில் வடபுறம் ஒரு கண்மாயாகவும், தென்புறம் ஒரு கண்மாயாகவும் தற்போது காட்சியளிக்கிறது. வடபுறமுள்ள கண்மாயின் கீழ்க்கரையில் மதகிற்கருகில் செவ்வக வடிவ தனிக் கல்லில் கல்வெட்டு காணப்படுகின்றது. கல்லின் ஒரு பக்கத்தில் பத்து வரிகளில் தமிழும் கிரந்தமும் கலந்த வரிவடிவில் பிழையின்றி தெளிவாக கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு



1. ஸ்வஸ்திஸ்ரீ கோவி
2. ராசகேசரி பன்மகி
3. யாண்டு அ ஆவது
4. மேன்கா குள நெல்லுக்

5. கலத்து ஊராழிய்யும் குள
6. செய்யும் முதியக்குடான் க
7. ண்டச் சாத்தன் வீரசோழப் பேர
8. ரையன்வச்ச தானம் இது இற
9. க்குவான் குளம் அழிச்சான் பா
10. வம் கொள்வான்

இக்கல்வெட்டு கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் "ராசகேசரி" பட்டம் புனைந்து சோழ நாட்டை ஆட்சி செய்த கண்டராதித்தச் சோழன் (கி.பி. 950958) கல்வெட்டாகும். கண்டராதித்தச் சோழனின் எட்டாவது ஆட்சியாண்டில் "முதியக்குடான் கண்டச் சாத்தன் வீரசோழப் பேரரையன்" என்பவன் மேன்கா குளத்தினை வெட்டி, குளத்திற்கருகில் வேளாண் நிலங்களை செப்பனிட்டு நெல்களத்து மேட்டினை அமைத்துக் கொடுத்ததோடு அதன் நிர்வாகப் பொறுப்பினை தன்னாட்சி நிர்வாகமாக ஏற்படுத்திக் கொடுத்த செய்தி கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

கண்டராதித்தச் சோழன் (கி.பி. 950 முதல் 958 வரை) எட்டாண்டுகள் சோழ நாட்டை சிறப்பாக ஆட்சி செய்தான். அம்மன்னனது எட்டாவது ஆட்சியாண்டு கல்வெட்டுகள் திருச்சி பகுதியில் அதிக எண்ணிக்கையில் கண்டறியப்பட்டுள்ளன. இம்மன்னனின் கல்வெட்டுகளும். திருவாலங்காட்டுச் செப்பேடும், லெய்டன் செப்போடும் இம்மன்னனைப் பற்றி குறிப்பிடுகின்றன. பன்னிரு திருமுறைகளுள் ஒன்றான திருவிசைப்பாவினை பாடிய இக்கண்டராதித்தச் சோழன் சிறந்த சிவபக்தனாவான். கண்டராதித்தச் சோழனின் ஆட்சியில் அடிக்கடி போரும், வறட்சியும் ஏற்பட்டு நாட்டில் பல சிற்றரசுகள் உருவாகும் நிலை ஏற்பட்டது. இச்சூழ்நிலையில் குளம் வெட்டி தண்ணீரை சேமித்து வைத்து அந்நீரை வேளாண் உற்பத்திக்கும், குடிநீர் தேவைக்கும் பகிர்ந்தளிப்பதை முக்கிய கடமையாக மன்னன் கருதினான். அச்சூழலில்தான் முதியக்குடான் கண்டச்சாத்தன் வீரசோழப் பேரரையன்'' என்பவன் சோழ நாட்டு உறையூருக்கு மிக அருகில் மேல்புறமுள்ள கானகத்தில் குளத்தினை வெட்டி (மேன்காகுளம்) வேளாண் நிலங்களை உருவாக்கி, கதிர் அடிக்கும் நெற்களத்து மேட்டினை ஏற்படுத்தி அதன் நிர்வாகத்தை தன்னாட்சி (ஊராழி - ஊராண்மை, தன்னாட்சி நிர்வாகம்) உடையதாக அமைத்துக் கொடுத்துள்ளான்.

கண்டராதித்தச் சோழன் ஆட்சியில் "கண்டராதித்தச் சதுர்வேதி மங்கலம்'' என்ற ஊரினை நிர்மானம் செய்தும், "கண்டராதித்த வாய்க்கால்'' என்ற கால்வாய் வெட்டியும் ''கண்டராதித்தப் போரரி" என்ற ஏரியினை அமைத்தும், "கண்டராதித்த விண்ணகரம்" என்ற பெருமாள் கோயிலை எடுப்பித்தும், இம்மன்னனுக்கு சிறப்பு செய்தமை கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. கண்டராதித்தன் இறந்தப்பின் அவனது துணைவியார் செம்பியன் மாதேவி ''கண்டராதித்தம்'' என்ற கற்றளியை ஏற்படுத்தி அதில் கண்டராதித்தனின் திருவுருவை நிறுவி பெருமைப்படுத்திய செய்தியையும் வரலாற்றில் காணமுடிகிறது.

இக்கல்வெட்டில் காணப்படும் "முதியக் குடான் கண்டச்சாத்தன் வீரசோழப் பேரரையன்" என்பவன் கண்டராதித்தச் சோழனின் தந்தை முதலாம் பராந்தகச் சோழன் (கி.பி. 907-953) ஆட்சியிலும், கண்டராதித்தச் சோழன் ஆட்சியிலும் பொறுப்புமிக்க அரசு அதிகாரியாக இருந்துள்ளான். அதனால் முதியக்குடான் என்ற தனது பெயருடன் கண்டராதித்தனின் பட்டப் பெயரான கண்டச் சாத்தான் என்பதையும், முதலாம் பராந்தகனின் பட்டப் பெயரான "வீரசோழன் என்பதையும் இணைத்து தனது அரசுப் பதவியான பேரரையன் என்பதையும் சேர்த்து "முதியக்குடான் கண்டச்சாத்தன் வீரசோழப் பேரரையன்" என்று அழைக்கப்பட்டுள்ளான். இவன் முதலாம் பராந்தகச் சோழன் காலத்திலும் கண்டராதித்தச் சோழன் காலத்திலும் பொறுப்புமிக்க அரசு அதிகாரியாகவோ சிற்றரசனாகவோ இருந்துள்ளமை இக்கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது. இவன் பேரரையன் என்று அழைக்கப்படுவதும் இவனது உயர்ந்த பொறுப்பினை உணர்த்துவதாக உள்ளது.

இக்கல்வெட்டில் காணப்படும் "மேன்காகுளம்" என்பது சோழநாட்டு உறையூருக்கு மேற்கே கானகத்தில் அமைக்கப்பட்ட குளம் என்ற பொருள்பட கல்வெட்டில் பொரிக்கபட்டிருக்க கூடும். இக்குளத்திற்கருகில் நத்தக்காடு என்று அழைக்கப்படும் பண்டைய மக்களின் வாழ்விடப் பகுதி காணப்படுகின்றது. அப்பகுதியில் பண்டைய மக்கள் பயன்படுத்திய மட்பாண்ட துண்டுகள், இரும்பு கழிவுகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்நத்தக்காட்டுப் பகுதியில்தான் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் குளம் வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் காணப்படும் "நெற்களம்" தற்போதும் களத்துமேடு என்ற பெயரில் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். "குளசெய்" என்று கல்வெட்டில் குறிப்பிடப்படும் வேளாண் நிலங்கள் கண்மாய்க்கு கீழ்புறம் சுமார் ஐந்நூறு ஏக்கர் பரப்பளவில் நிலங்கள் செப்பனிடப்பட்டு தற்போதும் இக்குளத்தின் மூலம் பாசன வசதியைப் பெற்று நன்செய் நிலங்களாக காட்சியளிக்கின்றன.

கண்டராதித்தச் சோழன் ஆட்சிக் காலத்தில் கடும் வறட்சி நிலவியதால் குளங்கள் வெட்டுவதை மிக முக்கிய கடமையாக கருதியுள்ளனர். தண்ணீரின் தேவையும் குளத்தின் பயன்படும் முக்கியமாக திகழ்ந்ததால், குளத்தைப் பாதுகாப்பது. உயிர் மூச்சாக கருதப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே கல்வெட்டின் இறுதியில் "குளம் அழிச்சான் பாவம் கொள்வான்" என்று ஓம்படைக்கிளவியாக பொறிக்கப்பட்டுள்ளது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியின் போது ஆங்கிலேயர் பல குளங்களை வெட்டி கல்வெட்டுகளைப் பொறித்து வைத்ததோடு இறுதியில் "குளம் அழித்த பாவத்தில் போவார்கள்"என்று குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். கங்கைக் கரையில் காராம் பசுவையும், மாதா பிதாவையும் கொல்வது பாவச் செயலாக கருதப்பட்டதைப் போன்று கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் குளத்தை அழிப்பதும் பாவச் செயலாகக் கருதப்பட்டுள்ளமை இக்கல்வெட்டின் மூலம் அறியப்படுகிறது. தண்ணீரின் தேவையும், குளத்தின் பயன்படும் உயிர்மூச்சாக விளங்கிய அனைத்து இடங்களிலும், அனைத்து காலக்கட்டங்களிலும் குளத்தை அழிப்பது கொடிய பாவச் செயலாக கருதப்பட்டுள்ளது என்பது இக்கல்வெட்டின் மூலம் அறியப்படும் செய்தியாகும். ★

12

ஜம்பை உரல் கல்வெட்டு

இரா. சிவானந்தம்
கல்வெட்டாய்வாளர்

விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் வட்டத்தில் திருக்கோயிலூர்-திருவண்ணாமலை வழித்தடத்தில் மணலூர்பேட்டையிலிருந்து 4 கி.மீ. தொலைவில் ஜம்பை எனும் இவ்வூர் அமைந்துள்ளது. தென்பெண்ணையாற்றின் வடகரையில் சிவத்தலமான ஜம்பையும் தென்கரையில் வைணவத்தலமான திருவரங்கமும் அமைந்துள்ளன. இதேபோல் காவிரியாற்றின் தென்கரையில் ஜம்புகேஸ்வரர் தலமான திருவானைக்காவலும் வடகரையில் திருவரங்கமும் அமைந்திருப்பது ஒப்புநோக்கத்தக்கது. இவ்வூரின் கிழக்கில் உள்ள குன்றில்தான் அதியமான் பற்றிய குறிப்புள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டொன்று உள்ளது.[1] இக்குன்றின் மேற்கே இவ்வூருக்கான ஏரி ஒன்று உள்ளது. இவ்வேரியில் உரல் ஒன்று காணப்படுகிறது.[2] இந்த உரல் ஐந்தடி உயரமும் மூன்றடி விட்டமும் கொண்டது. உரலின் நடுப்பகுதிலுள்ள குழி முக்கால் அடி விட்டமும் ஓரடி ஆழமும் கொண்டுள்ளது. இவ்வுரலின் வாயில் பகுதியிலிருந்து 10 செ.மீ. அளவு கொண்டு செதுக்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதி கரடுமுரடாக அமைந்தள்ளது. எனவே அவ்வுரல் மேல் பகுதி தெரியும் வகையில் கீழ்ப்பகுதி மண்ணில் புதைத்து வைத்திருக்க வேண்டும்.இவ்வுரலின் வாயில் பகுதி விளிம்பில் இரண்டு வரிகளைக் கொண்ட கல்வெட்டொன்று வட்டவடிவில் வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டின் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம். இக்கல்வெட்டிலுள்ள மெய்யெழுத்துகளுக்கு புள்ளி இடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அக்கல்வெட்டின் வாசகமாவது:

1. ஸ்வஸ்திஸ்ரீ கள்ளையன் செய்த தருமம் கழத்துவப்பட்டியும் பனைப்
2. பாட்டமும் யெரிக்கட்டின இவை நிறுத்தனானடி என்முடி மெலன

இந்த ஏரியினை கள்ளையன் என்பவன் செய்வித்துள்ளான். களத்துமேடு மூலமாகப் பெறப்படும் வரிவருவாயிலிருந்தும் (களத்துவப்பட்டி), பனைமர குத்தகையிலிருந்தும் இவ்வேரியினைப் பாதுகாக்கவேண்டும் எனவும், இந்த ஏரியினைப் பாதுகாக்கும் தருமப் பணியினை தொடர்ந்து நிலை நிறுத்துபவர்களின் காலடி என் தலை மேல் வைத்துக் கொள்கிறேன் என்று கள்ளையன் கூறுவதாக இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

இவ்வூர் வேளாண்மை சிறப்படைய இவ்வேரியினை ஏற்படுத்தியிருப்பது குறிப்பிட்டதக்க அம்சமாகும். இந்த ஏரிப்பாசனத்தால் பயனடையும் நிலங்களில் பயிர்செய்யப்படும் வேளாண் பொருட்களை பொதுவான களத்துமேட்டில் சேகரிக்க ஏற்பாடு செய்துள்ளனர். மேலும் இக்களத்துமேட்டினை பயன்படுத்துபவர்களிடம் உரிய வரி வசூலித்துள்ளனர். மற்றும் இந்த ஏரிக்கரையினைச் சுற்றி, கரையைப் பலப்படுத்துவதற்காகவும் ஏரி உடையாமல் பாதுகாப்பதற்காகவும் பனை மரங்களை நட்டுள்ளனர். இப்பனைமரங்களைக் குத்தகைக்கு விட்டு, அக்குத்தகை வாயிலாக வருவாய் பெற்றுள்ளனர். களத்துமேட்டு வரி மற்றும் பனைக் குத்தகையிலிருந்து பெறப்படும் வருவாயைக் கொண்டு இந்த ஏரியினை பாதுகாக்க ஏற்பாடு செய்திருப்பது சிறப்புச் செய்தியாகும். இவ்வாறு ஊர்ப் பொது நலனுக்காக வழங்கப்பட்டவைகள் அன்றைய பொது நலனில் அக்கரையுள்ளவர்களால் ஏற்படுத்தப்பட்டவை என்றால் மிகையல்ல.

இதேபோன்று தமிழகத்தின் பல பகுதிகளில் கல்லால் ஆன பழமையான செக்கு மற்றும் உரல்கள் பல கிடைக்கின்றன. இவற்றில் பெரும்பாலனவற்றில் கல்வெட்டுகள் ஏதும் காணப்படவில்லை. சிலவற்றில் மட்டுமே கல்வெட்டுகள் கிடைக்கின்றன. தமிழகத்தில் கிடைத்துள்ள கல்வெட்டு பொறிப்புள்ள செக்கு மற்றும் உரல்களாவன விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் ஏம்பலத்தில்[3] கி.பி.8-9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் எழுத்துக்களுடன் கூடிய செக்கு, விழுப்புரம் வட்டம் காணையில்[4] கி.பி.9-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துடன் கூடிய செக்கு, விழுப்புரம் வட்டம் ஆலூரில்[5] கி.பி.9-10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுடன் கூடிய செக்குரல், கரூர் மாவட்டம் கரூர் வட்டம் வெள்ளியணையில்[6] கி.பி.10-ஆம் நூற்றாண்டு தமிழ் எழுத்துப் பொறிப்புகளுடன் கூடிய செக்கு, கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டம் பழைய ஜெயங்கொண்ட சோழபுரத்தில்[7] கிபி 10-ஆம் நுர்றாண்டைச் சார்ந்த தமிழ் எழுத்துக்களுடன் கூடிய செக்கு, குளித்தலை வட்டம் கூடலூர் நத்தமேட்டடில்[8] 'ஸ்ரீ பிடாரன் மல்லன் செக்கு' என்ற கிபி 10-ஆம் நுற்றாண்டு தமிழ் எழுத்துப்பொறிப்புடன் கூடிய செக்கு, தருமபுரி மாவட்டத்தில் சின்னப்பட்டி, சிக்களூர், கொரகலவாடி, அலமேலுபுரம் ஆகிய ஊர்களில் கி.பி.10-ஆம் நூற்றாண்டு தமிழ் எழுத்துகளுடன் கூடிய செக்குகள்[9], திருவண்ணாமலை மாவட்டம் மணிக்கல்லில்[10] கி.பி.10-ஆம் நூற்றாண்டு தமிழ் எழுத்துடன் கூடிய செக்கு, மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கச்சிராயன்பட்டியில்[11] கண்டெடுத்த கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வட்டெழுத்துடன் கூடிய செக்கு, மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கீழவளவு[12] சமணப்பள்ளியிலுள்ள கி.பி.9-10-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியுடன் கூடிய உரல் கல்வெட்டு, விருதுநகர் மாவட்டம் விருதுநகர் வட்டம் காரிசேரியில்[13] கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த செக்கு, விருநகர் வட்டம் முத்துலாபுரம்[14] கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டுச் செக்கு, செஞ்சி வட்டம் மேல்ஒலக்கூர்[15] அருகே உள்ள கி.பி. 14-15ஆம் நூற்றாண்டு உரல், நெல்லை மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில்[16] கி.பி.16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கரும்புச் செக்கு, வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் பாலே குப்பத்தில்[17] உள்ள கி.பி. 19-ஆம் நூற்றாண்டு உரல், மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம் மேலத்திருமாணிக்கம்[18]

கிராமத்தில் அமைந்துள்ள 19-ஆம் நூற்றாண்டு செக்கு என இதுவரை தமிழகத்தில் கல்வெட்டுடன் கூடிய செக்கு மற்றும் உரல்கள் கண்டறியப்பட்டுள்ளன.


மேற்கண்ட செக்கு மற்றும் உரல்களில் அக்கால எழுத்தமைதியில் செக்கு மற்றும் உரல்களை வெட்டி வைத்தவரின் பெயர் மட்டுமே காணப்படுகிறது. ஆனால் ஜம்பை உரலிலுள்ள கல்வெட்டு இவ்வூர் ஏரியினை வெட்டி வைத்தது குறித்தும் அதனை பாதுகாப்பது குறித்தும் தெரிவிப்பது சிறப்பம்சமாகும்.

அடிக்குறிப்புகள்:

1. ஸ்ரீதர், தி.ஸ்ரீ. (பதிப்பு) 'தமிழ் பிராமி கல்வெட்டுகள்' 2006, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை. (இக்கல்வெட்டு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர் திரு கா.செல்வராஜ் அவர்களால் 1981-ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது)
2. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப. அவர்களுக்கு நன்றி. கல்வெட்டுப் படியெக்கும் முனைப்புத்திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணியின் போது இக்கட்டுரை ஆசிரியரால் இக்கல்வெட்டு கண்டறியப்பட்டது
3. நம்பிராசன், எம். 'ஏம்பலம் செக்குக் கல்வெட்டு' *ஆவணம்* இதழ் 11, பக்.17. 2000, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
4. வீரராகவன், சி. மற்றும் மங்கையர்கரசி 'விழுப்புரம் மாவட்டத்தில் அண்மைக்காலத் தொல்லியல் கண்டுபிடிப்புகள்' *ஆவணம் இதழ்* 11, பக்.21. 2000, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
5. பூபாலன், ப. 'ஆலூர் செக்குரல்' *கல்வெட்டு காலாண்டு இதழ் -74*, ஏப்ரல் 2007. பக்.27. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
6. கணேசன், நா. 'ஐந்நூற்றுவர் செக்கு' *ஆவணம் இதழ்-11*, பக்.25. 2002. தமிழகத் தொல்லியல் கழகம் தஞ்சாவூர்.
7. கணேசன், நா. 'கரூர் மாவட்டத்தில் சில புதிய கல்வெட்டுகள்' ஆவணம் இதழ்-13, பக்.55, 2002. தமிழகத் தொல்லியல் கழகம் தஞ்சாவூர்.
8. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கரூர் அகழ்வைப்பக காப்பாட்சியர் திரு.நாக. கணேசன் அவாகள் அளித்த தகவல்.
9. இராசகோபால், சு. 'வரலாற்றில் செக்கு' *கல்வெட்டு காலாண்டு இதழ் -9* பக்.17-26. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
10. மேலது.
11. இராசேந்திரன், பொ., வேதாசலம், வெ., சாந்தலிங்கம், சொ. (பதிப்பு.) 'மதுரை மாவட்டக் கல்வெட்டுகள்' தொகுதி-1 தொடர் எண்: 61/2003 தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

12. இராசேந்திரன், பொ., வேதாசலம், வெ., சாந்தலிங்கம், சொ. (பதிப்பு.) 'மதுரை மாவட்டக் கல்வெட்டுகள்' தொகுதி-1 தொடர் எண்: 118/2003 பக்.196 தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
13. ஸ்ரீதர், தி.ஸ்ரீ. (பதிப்பு,) 'விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள்' தொகுதி-2 தொடர் எண்: 221/2005 பக்.26 தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
14. இராசேந்திரன், பொ., வேதாசலம், வெ., சாந்தலிங்கம், சொ. (பதிப்பு.) 'விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள்' தொகுதி-1 தொடர் எண்: 304/2005 பக்.256 தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
15. சண்முகம், கொடுமுடி 'பஞ்சாணம் பாறை' *ஆவணம் இதழ்-3*, பக்.39. 1993. தமிழகத் தொல்லியல் கழகம் தஞ்சாவூர்.
16. செந்தில்செல்வகுமரன், மா. 'நெல்லையில் கரும்புச் செக்குரல்' *கல்வெட்டு காலாண்டு இதழ் -73*, ஜனவரி 2007. பக்.34. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
17. வெங்கடேசன், ப. மற்றும் பூபாலன், ப. 'பாலேகுப்பம் கல்வெட்டுகள்' *ஆவணம் இதழ்-11*, பக்.16. 2000. தமிழகத் தொல்லியல் கழகம் தஞ்சாவூர்.
18. இராசேந்திரன், பொ., வேதாசலம், வெ., சாந்தலிங்கம், சொ. (பதிப்பு.) 'மதுரை மாவட்டக் கல்வெட்டுகள்' தொகுதி-2, பக்.73. 2008. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

(இக்கல்வெட்டை எடுத்து உதவிய திரு ப.பூபாலன், திரு சி.ஜோதி, திரு ம.துரை, திரு த.அரிகிருஷ்ணன் ஆகியோருக்கு நன்றி)



பூம்புகார் கடலில் கிடைத்த அரிய தொல்லியல் தடயம்

பூம்புகார் மீனவர் காலனியில் குடியிருப்பவர் திரு. அ. செல்லதுரை வயது 45, த/பெ. அஞ்சப்பன். சமீபத்தில் பூம்புகார் கடலாய்வு அகழ்வைப்பகம் கல்வெட்டாய்வாளரிடம் ஒரு சுடுமண் பொம்மையைக் கொண்டு வந்து ஒப்படைத்தார். அது கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது அவரது வலையில் சிக்கியது என்றும் அதை எடுத்துப் பார்த்த போது மிகவும் கடினமாகவும், கனமாகவும் இருந்ததாகவும், ஏதோ இரும்பால் செய்யப்பட்ட பொருள் என்று கருதியதாகவும் குறிப்பிட்டார். பூம்புகார் ஊரில் கிழக்கில் 5 கி.மீ. தூரத்தில் கடலில் அமைந்துள்ளது. "கரையப்பார்" எனும் இடமாகும். இந்த இடத்தில் அரை வட்டவடிவில் ஒரு கட்டத்தின் நீண்ட அடிச்சுவர் பகுதி உள்ளது. இப்பகுதியில் மீன் பிடிக்கும்போதுதான் ஒரு சுடுமண் உருவம் கிடைத்துள்ளது. அது சுமார் 50 அடி ஆழத்தில் இருந்து கிடைத்துள்ளது.

இந்த சுடுமண் உருவம் மிகக் கெட்டியான களிமண்ணால் செய்து சுட்டெடுக்கப்பட்டுள்ளது. இது மிகவும் உறுதியாகவும் , நேர்த்தியாகவும் செய்யப்பட்டுள்ளது. நீண்ட காலமாகக் கடலில் கிடந்ததால் சற்று தேய்ந்து காணப்படுகிறது. பழங்காலத்தில் குழந்தை ஈன்ற தாய் தனது மடியில் வைத்து அணைத்துக் கொண்டு அமர்ந்து பால் ஊட்டும் நிலையில் இவ்வுருவம் உள்ளது. உருவத்தின் அகலம் -10.5 செ.மீ., உயரம் - 14 செ.மீ., எடை - 700 கிராம் ஆகும்.

சுடுமண் சிற்பத்தின் அமைப்பு



தாய் தனது குழந்தையை இடுப்பில் வைத்து அமர்ந்து பாலூட்டும் நிலை. தலையில் சடை கற்றை, அகன்ற தலை, பரந்தமுகம், காதுகளில் பத்ரகுண்டலங்கள் அணி செய்கிறது. வலது காலை இடது பக்கவாட்டில் மடித்து வைத்தும், இடது காலை மடித்துக் குத்திட்டு குழந்தைக்கு அனைவாக வைத்தும் உள்ளார். இடது கை குழந்தையைக் கவ்விப்பிடித்துள்ளது. வலது கை குழந்தையின் முகத்தை மார்பகம் மீது வைத்து இயற்கையாகப் பாலூட்டும் தன்மையில், இந்தத் தாய் தெய்வ வடிவ சிற்பம் மிகநேர்த்தியாக வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் கி.மு. 4-5ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகக் கருதலாம்.

கோ. முத்துசாமி
கல்வெட்டு ஆய்வாளர்

துறை நிகழ்வுகள்

24-3-2009

இத்துறையில் மாதந்தோறும் நடைபெறும் திங்கட்பொழிவில், நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2040 பங்குனித் திங்கள், 11-ஆம் நாள் (24-3-2009) முனைவர் **ஆ.பத்மாவதி**, கல்வெட்டாய்வாளர் (ஓய்வு) அவர்கள் 'முதலாம் இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியும் அயல்நாட்டு தொடர்புகளும் - ஒரு பார்வை என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். முன்னதாக, முதன்மைச் செயலாளர்(ம)ஆணையர் முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்** இஆப, அவர்கள் தலைமை உரையில், காலத்தில் தமிழர்கள் கடல் கடந்து வாணிகம் செய்துள்ளனர் என்றும், அதற்கானப் பல தொல்லியல் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன என்றும் தெரிவித்தார். முனைவர் பத்மாவதி அவர்களது உரையில் முதலாம் இராஜேந்திர சோழனின் வடஇந்திய படையெடுப்பு தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பு மற்றும் வெற்றிக் கொண்ட நாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். முனைவர் சொ.சாந்தலிங்கம், தொல்லியல் அலுவலர் அவர்கள் வரவேற்புரையும், முனைவர் சீ.வசந்தி, அகழாய்வாளர் நன்றியுரையும் நிகழ்த்தினர்.

24-4-2009

இந்துசமய அறநிலைத் துறையுடன் இணைந்து திருக்கோயிற் கலைச் செல்வங்கள் பராமரிப்பு தொடர்பான பயிலரங்கம் நடத்தப்பட்டது. இப்பயிலரங்கத்தில் முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்** இஆப, அவர்கள் தொடக்கவுரையாற்றினர். முனைவர் அர.பூங்குன்றன், கல்வெட்டறிஞர் மற்றும் திரு. கி.சு.சம்பத், கல்வெட்டாய்வாளர் ஆகியோர் கோயிற் கல்வெட்டுகள் - சிறப்புத் தன்மைகளும் பராமரிப்பின் அவசியமும் என்ற தலைப்பிலும், முனைவர் சொ.சாந்தலிங்கம், தொல்லியல் அலுவலர் மற்றும் திரு. சொ.சந்திரவாணன், பதிவு அலுவலர் ஆகியோர் கோயிற் சிற்பங்கள், கட்டடக்கலை - சிறப்பும் சீர்மையும் என்ற தலைப்பிலும் திருமதி. அர.வசந்தகல்யாணி, பதிவு அலுவலர்(சென்னை) மற்றும் திரு. பொ.இராசேந்திரன் பதிவு அலுவலர்(திருச்சி) ஆகியோர் செப்புத் திருமேனிகள் - அருமையும், பாதுகாப்பின் அவசியமும் என்ற தலைப்பிலும், முனைவர் சீ.வசந்தி, அகழாய்வாளர் மற்றும் திரு. இரா.நாராயணன், உதவி செயற்பொறியாளர் ஆகியோர் கோயிற் திருப்பணிகள், ஓவியங்கள் அரும்பொருட்களின் வரலாறும், அவசியமும் என்ற தலைப்பிலும் பயிலரங்க வகுப்புகள் நடத்தினர். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை முதன்மைச் செயலாளர்(ம)ஆணையர் **திரு.த.பிச்சாண்டி**,இஆப."திருக்கோயிற் கலைச்செல்வங்கள் பராமரிப்பு" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

26-6-2009

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா 26-6-2009மாலையில் இத்துறையின் கருத்தரங்கக்கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது. இத்துறையின் முதன்தைச் செயலாளர் மற்றும் ஆணையர் முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்** இஆப, அவர்கள் தலைமையில் மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் **திரு. தங்கம் தென்னரசு** அவர்கள் வெளியிட தமிழ்நாடு அரசு சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலாளர் முனைவர் **வெ.இறையன்பு**, இஆப, அவர்கள் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில் 1.விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள - இரண்டாம் தொகுதி 2.காப்பலூர் 3.Indus civilazition and Tzmil Laungage பற்றியக் கருத்தரங்கக் கட்டுரை தொகுப்பு ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.